★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 மாசி 4 ஐ. அவ். 2 இதழ் 6

யாழ்ப்பாணம் புதன்கிழமை 16—2—83

(புதுடில்லி)

உபாலி விஜேவர்த்தன பிரயாணம்செய்த அவரது சொந்த 'ஜெட்' விமானம் காணமற்போனது குறித்து விமான விபத்துகள் சம்பந்தமாக உத்தியோகபூர்வமாக இங்கு அறிவிக்கப்பட்ட மூன்று முக்கிய விபரங்கள்:-

1 ஒரு விமானம் பறந்து கொண்டிருக்கும்போது வானத்தில் வெடித்துச் சிதறிக் கடலில் விழுமானால்—

விமானத்தில் பொருத்தப்பட்டிருக்கும் உயிர் பாதுகாப்பு உடைகள் மற்றும் விமானத்தின் பகுதிகள் உடனடியாகவே கடலில் மிதக்கும்.

2. விமானம் கடலில் விழுந்து மூழ்குமானால் உயிர் பாதுகாப்பு உடைகள் மற்றும் பகுதிகள் கடலின் மேற்பகுதிக்குவர மூன்று நான்கு நாட்கள் செல்லலாம்.

3. விமானம் எந்தவிதச் சேதமும் இல்லாமல் கடலில் விழுமானால் கடல் அலைகளால் சில மைல் தூரம் அடித்துச் செல்லப்படலாம்.

பத்துப் பேர் மட்டுமே பிரயாணம்செய்யக்கூடிய சிறிய வெள்ளை நிற உபாலி 'ஜெட்'டுக்கு என்ன நடந்தது என்பதே மர்மமாக உள்ளது.

மேற்படி விபரங்களை அவதானிக்கும்போது, கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு காணமற்போன உபாலி விமானத்தின் விபரங்கள் இன்று மாலை தெரியவரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'மர்மம்'
இன்று
வெளிவரும்

★ உபாலி விமானம் பற்றிய கடைசி தகவல்கள்:

# இலங்கை எல்லைக்குள் கடலில் விழுந்தது!



## சர்வதேச ரீதியில் தேடுதல்வேட்டை தொடர்கிறது

(கொழும்பு)

தொழிலதிபர் உபாலி விஜேவர்த்தன ஐவருடன் பயணம் செய்த பதினைந்து கோடி ரூபா பெறுமதியான 'ஜெட்' விமானம் இலங்கை ஆகாயப் பிராந்திய எல்லைக்குள், 500 மைல் தூரத்தில் கடலில் மூழ்கியிருக்கலாம் என்று கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 9-30 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த பல்கேரிய விமானக் காப்டன் தெரிவித்த தகவலின்படி: இலங்கைக்கரையிலிருந்து 500 மைல் தூரத்தில் உபாலியின் விமானம் கடலில் மூழ்கியிருக்கலாம் என்று இலங்கை விமானப்படைக் காப்டன் டிக் பெரேரா தெரிவித்தார்.

### கடைசி நேர சமிக்ஞைகள்

பல்கேரியா விமான காப்டன் ரேய் ஜேருக்கு, உபாலியின் விமான ஓட்டியின் சமிக்ஞை கேட்டதாகவும், விமான ஓட்டி அந்தநேரம் பதட்டமின்றி இருந்தாரென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த பல்கேரியா விமானம் அந்த நேரத்தில் கொழும்புக்கு 200 மைல் தூரத்தில் 39,000 அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தது.

### விமானத் தொடர்புகள்

உபாலி விமான ஓட்டி, முதலில் தங்களை அறிமுகம்செய்து வைத்தபின்னர் 12, 49 அலை வரிசையில் அடையாள சமிக்ஞை கேட்டதாகவும் பல்கேரிய விமான காப்டன் தெரிவித்தார்.

கொழும்பு கட்டுப்பாட்டு நிலைய ஆலோசனைப்படி மீண்டும் உபாலியின் விமானத்துடன் தொடர்பு கொள்ள முயன்றபோதும் பயன்கிடைக்கவில்லையென்றும் அவர் கூறினார்.

அவசர சேவை அலைவரிசை மூலம் கொழும்பு கட்டுப்பாட்டு நிலையத்தின் ஆலோசனையைப் பெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

### அமெரிக்க 7-வது கடற்படை

உபாலி குழுவினர் சென்ற விமானம் மலாக்கா நீரிணையில் விழவில்லை என்றும், இலங்கை ஆகாய எல்லைக்குள் கிழக்கே 500 மைல் தொலைவில் கடற் பிராந்தியத்திற்குள் விழுந்திருக்கலாம் என்றும் இலங்கை விமானப் படைக் காப்டன் பெரேரா தெரிவித்தார்.

கடலில் தேடுதல் நடத்த அமெரிக்க 7-வது கடற்படைப் பிரிவினர் முன்வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### இந்திய விமானங்கள்

இன்று புதன்கிழமை காலை 6 மணிக்கு இலங்கை விமானப் படையைச் சேர்ந்த விமானங்களும், இந்திய விமானப் படையைச் சேர்ந்த விமானங்களும் தேடுதலை ஆரம்பிக்கும்.

இதே நேரத்தில் உபாலி ஜெட் விமானத்தைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் அமெரிக்கா, சோவியத் யூனியன், பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளின் கடற்படைகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

### அரசு கோரிக்கை

இலங்கை அரசாங்கத்தின்

[8ம்-பக்கம் பார்க்க]

## உபாலி செய்தி அறிவதில் மக்கள் காட்டிய ஆர்வம்

எந்த இடத்திலும் இப்போது உபாலிபற்றித்தான் பேச்சு! எவருடன் பேசினாலும் உபாலிபற்றித்தான் முதலில் கேட்கிறார்கள்!

வானொலியைச் சுற்றி ஒரு கூட்டமே நிற்கிறது. குண்டூசி விழுந்தாலும் கேட்காத நிசப்தத்தில் வானொலி முன்னால் நின்று உபாலிபற்றிச் சொல்லப்படும் செய்தியைக் கேட்கிறார்கள்.

யாழ்ப்பாண நகரத்திலுள்ள பல தேநீர்க் கடைகளில் ஜனங்கள் கூட்டமாக நின்று செய்தி கேட்டுக்கொண்டிருந்தார்கள். இதேபோன்று மூலைமுடுக்கெல்லாம் செய்திகளைக் கேட்பதில் மக்கள் ஆர்வமாக இருக்கிறார்கள்.

வீடுகளிலும் செய்திகள் ஒலிபரப்பப்படும் நேரத்தில் குடும்ப அங்கத்தினர் ஒருவர் கூடத் தவறாது வானொலியைக் கேட்கிறார்கள்! வீட்டிலிருக்கும் குடும்பப் பெண்களுக்குக் கூட உபாலியின் விமானத்துக்கு என்ன நடந்தது என்பதை அறிவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறார்கள்.

"என்ன கவலையா இருக்கிறாய்? சுகயீனமா!" என்று ஒரு கணவர் தன் மனைவியை நேற்றுக்காலை நித்திரைவிட்டெழுந்ததும் கேட்டாராம்! "ஒன்றுமில்லை! எத்தனை விமானங்களுக்குச் சொந்தமானவராக இருக்கிறார்; ஏதாவது ஒரு பாலைவனத்துக்குள் விழுந்து உயிர் தப்பமாட்டாரா?" என்று அவர் மனைவி கூறினாராம்.

இதேபோன்று, உபாலி விஜேவர்த்தனவின் செய்தியை அறிவதில்தான் பொதுமக்கள் மிகவும் ஆவலாக இருக்கிறார்கள். அவர் மீண்டும் இலங்கைக்கு வரமாட்டாரா என்ற ஏக்கம் எல்லார் மனதிலும் ஏற்பட்டிருப்பதைக் கவனிக்கக்கூடியதாக இருக்கிறது.

— ஈ. கே. ஆர்

★ காமன்வெல்த் சட்ட அமைச்சர்கள் பத்திரிகையாளர் மகாநாட்டில்

## "ஈழநாடு" நிருபருக்கு ஏற்பட்ட அனுபவம்

காமன்வெல்த் சட்ட அமைச்சர்களின் ஆறுநாள் மகாநாடு 14ம் திகதி திங்கட்கிழமை பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் ஆரம்பமானது. இம் மகாநாடு சம்பந்தமாக அன்று மாலையில் நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் நமது கொழும்பு நிருபருக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பின்வருமாறு அவர் விளக்குகின்றார்:-

"கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் (14-2-83) காலை நடைபெற்ற காமன்வெல்த் சட்ட அமைச்சர்கள் மகாநாடு தொடர்பாக நேற்று மாலை 3-30 மணியளவில் அதே மண்டபத்தில் நடைபெறவிருந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி சென்றிருந்தேன். அங்கு சென்றதும் முதலில் நீதியமைச்சரின் செயலாளர் (தகவல்) திரு. எச். கே. பீரிஸைச் சந்தித்தேன். முன்னறிவிப்பின்படி

[8-ம் பக்கம் பார்க்க]

LANKA TRAVELS AND TOURS

வெளிநாடு - சுற்றுலா பயணங்கள்
மற்றும் தேவைகளுக்கு
வடபகுதியில் நீங்கள் நாடவேண்டிய
நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

லங்கா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ்

சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

பாஸ்போர்ட் தஸ்தாவேஜுக்கள், விமான - கப்பல் ரிக்கற்றுகள், இரா விசா, எக்ஸ்சேஞ் சேவைகள் அனைத்தும் ஒருங்கே செய்து கொடுக்கப்படும்.
பிரயாணிகளின் வசதிக்கேற்ப இலகுவாகவும், விரைவாகவும் வேலைகள் பூர்த்திசெய்யப்படுகின்றன.
நீங்கள் வெளிநாடு செல்லத் திட்டமிட்டிருந்தால் உடனே தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

லங்கா ட்ரவல்ஸ் அன்ட் டுவர்ஸ்,
248, அண்ணாமலை றேட்,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

6207

## வரி விளம்பரம்

### தேவை

பாதுகாவலர்கள் தேவை. ஓய்வுபெற்றவர்களும் வரலாம். நற்சாட்சிப் பத்திரங்களுடன் இம்மாதம் 17ம், 18ம் திகதிகளில் காலை 10 மணிக்கும், 11 மணிக்குமிடையில் நெல்லிப்பழை சந்திக்கருகாமையில் உள்ள விருடியோ 'ஜீவ்'க்கு நேரில் வரவும். (6200)

சிறுவர் பாடசாலைக்கும், சுருக்கெழுத்து, தமிழ்தட்டச்சு, ஆங்கிலம் முதலியன கற்பிக்கவும் ஆசிரியர்கள் தேவை. சகல விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 6203, C/O ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். (6203)

### விற்பனைக்கு

முதிர்ந்த மலைவேம்பு மரம் விற்பனைக்குண்டு. இணுவில் மிஷன் வைத்தியசாலை வளவில் தேவாலயத்திற்கு அருகாமையில் பார்வையிடலாம். வாங்க விரும்புவோர் இம்மாதம் 22ம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை ஆதீனக் காரியாலயப் பொருளாளரை சந்திக்கவும். (6201)

### வைத்தியம்

மனநோய், வலி, அல்சர் சருமநோய்கள் எவ்வளவு நாட்பட்டதாயினும் பார்த்து உத்தரவாதத்துடன் சிகிச்சை அளிக்கப்படும். ஜெயந்தி வைத்தியசாலை, 218/5 பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 6127

### WANTED

M. B. B. S Doctor – Wanted no night duties. Applications giving details of experience and the names and addresses of two Medical referees to The Medical Centre, 415, K. K. S. Road, Jaffna Tel: 24301. (6206)


## கூட்டுறவு ஊழியர்சங்க ஆண்டுவிழா

[பண்டத்தரிப்பு]

கூட்டுறவு ஊழியர் சங்கத்தின் 4வது ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்தப்பொதுக் கூட்டமும் எதிர்வரும் 19-ம் சனிக்கிழமையன்று முற்பகல் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சங்கத் தலைவர் திரு. க. துரைசாமி தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் தமிழ் தொழிற்சங்க கூட்டணி சார்பில் திரு. ஐ. தி. சம்பந்தன், லங்கா தொழிற்சங்க சம்மேளனத்தின் சார்பில் திரு எஸ். விஜயானந்தன், சீமெந்து பொதுத் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த திரு. நா. நடராஜா ஆகியோர் உட்படப் பலர் கலந்துகொண்டு உரை நிகழ்த்துவார்கள். இக்கூட்டத்திற்கான ஒழுங்குகளை சங்க பொதுச் செயலாளர் திரு நா. த. இராஜதுரை செய்துள்ளார்.

## இந்தியாவில் மண்ணெண்ணெய், டீசல் விலைஅதிகரிப்பு

புதுடில்லி, பெப். 15

இந்தியாவில் மண்ணெண்ணெய், டீசல் மற்றும் பெற்றோலியப் பொருட்களின் விலைகள் நேற்று நள்ளிரவு முதல் அதிகரிக்கப்பட்டுள்ளது. (வெ)


## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்

காலஞ்சென்ற வயித்திலிங்கம் சிவஞானசிங்கம் பெண் பதமாவதியின் மரணசாதன விடயமாக

இன்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை, கரணவாய் வடக்கு.

மனுதாரர்.

மரணசாதன நியாயாதிக்கம் இல. 1127/ரீ

எதிராக

1. வயித்திலிங்கம் சிவஞானசிங்கம்.
2. வயித்திலிங்கம் சிவஞானசிங்கம் மகள் யசோதா.
3. வயித்திலிங்கம் சிவஞானசிங்கம் மகள் சுபத்திரா.
4. வயித்திலிங்கம் சிவஞானசிங்கம் மகள் வித்தியா யாவரும் கரணவாய் வடக்கு.

எதிர்மனுதாரர்

மேலே இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்தவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1981-ம் ஆண்டு மார்கழி மாதம் 11-ந் திகதி முற்பகல் 9-30 மணிக்கு இம்மன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுணதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1981-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 8-ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி பதிவாளர்.

வரைவு:

வ. மகாலிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.

11-12-81
காரணம் காட்டும் காலம் 12-2-82க்கு நீடிக்கப்பட்டது.

ஒப்பம்
சோ. இ.
மா. நீ.

12-2-82
காரணம் காட்டும் காலம் 2-4-82க்கு நீடிக்கப்பட்டது.

ஒப்பம்
எம். டி. ஜே.
மா. நீ.

2-4-82
காரணம் காட்டும் காலம் 2-7-82க்கு நீடிக்கப்பட்டது.

ஒப்பம்
சோ. இ.
மா. நீ.

2-7-82
காரணம் காட்டும் காலம் 10-9-82 வரை நீடிக்கப்பட்டது.

ஒப்பம்
சோ. இ.
மா. நீ.

10-9-82
காரணம் காட்டும் காலம் 10-12-82 வரை நீடிக்கப்பட்டது.

ஒப்பம்
சோ. இ.
மா. நீ.

10-12-82
காரணம் காட்டும் காலம் 18-2-83 வரை நீடிக்கப்பட்டது.

ஒப்பம்
சோ. இ.
மா. நீ.

[6196]


### ஹாட்லி புதிய மாடிக்கட்டடம்

# "பூரணம்பிள்ளையின் பெயர் மிகப் பொருத்தம்"

— பரு. எம். பி.

[புலோலி]

"பணவீக்கம் அதிகரித்து வரும் இக்காலகட்டத்தில் நாம் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களைப் பூர்த்திசெய்வது மிகக் கடினமானதாக இருக்கின்றது. 1983ம் ஆண்டு அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்துவதற்கு 13 இலட்சம் ரூபாதான் உண்டு".

இவ்வாறு பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் சுமார் 4 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மரவேலைக் கூடம், சித்திரக்கூடம், பிரார்த்தனைமண்டபம், வகுப்பறைகளைக் கொண்டமாடிக்கட்டிடத்தைச் சம்பிரதாய பூர்வமாகத்திறந்துவைத்து உரையாற்றிய பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம் குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திரு. டபிள்யூ. என். எஸ். சாமுவேல் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவைக்கல்லூரியின் பழைய மாணவரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. த. இராசலிங்கம் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்தார். தொடர்ந்து உரையாற்றிய எம். பி. திரு. துரைரத்தினம் குறிப்பிட்டதாவது.

பணவீக்கம்அதிகரித்துவரும் இவ்வேளையில் நாம் மேற்கொள்ளும் அபிவிருத்தித்திட்டங்களைப் பூர்த்தி செய்வது மிகக்கடினமானதாக இருக்கின்றது.

1983ம் ஆண்டு அபிவிருத்தி திட்ட வேலைகளுக்குப்பயன் படுத்துவதற்கு 13லட்சம் ரூபாதான் இருக்கிறது.

"கல்வி அபிவிருத்தியில்தான் நாம் அதிகவனம் செலுத்த வேண்டும், எமது எதிர்கால சந்ததியினரின் கல்விமேம்பாடு கருதி ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் ஆகிய சகலரும் ஒருங்கிணைந்துசெயற்படவேண்டும் இக்கல்லூரியின் பழைய மாணவரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு. நவரத்தினம் இப்பாடசாலையில் கட்டிடமொன்று அமைக்கப்படவேண்டுமென்று என்னொடு கலந்துரையாடியிருந்தார். அது போல பழைய மாணவர்கள் அனைவரும் தமதுபழையகல்லூரிகளின் அபிவிருத்திகளில் அக்கறைகொண்டு செயற்படவேண்டும். கல்வி அபிவிருத்திக்க மேம்பாடடையும் போதுதான்எமது எதிர்காலச்சந்ததியினர் உயர்ந்தவர்களாகத் திகழமுடியும்".

இக்கல்லூரியின் அபிவிருத்திக்கு என்னுலான உதவிகளை வழங்கத்தயாராக உள்ளேன். இக்கல்லூரி மிகச்சிறந்த கல்லூரியாகத்திகழவேண்டுமென்பதே எனது அவாவாகும்.

இன்று இங்கு திறந்து வைக்கப்பட்டிருக்கும் கட்டிடத்திற்கு முன்னர் இங்கு 24வருடங்களாக அதிபராகக் கடமையாற்றிய திரு. பூரணம்பிள்ளையின் பெயரைவைத்தது மிகப் பொருத்தமானதாகும்.

ஹாட்லிக் கல்லூரியைப் பொறுத்தமட்டிலே 60% மாணவர்கள் உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்தவர்கள் எனவே இக்கல்லூரியின் அபிவிருத்திகளில் 60%த்தைஉடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் மேற்கொண்டு உதவி வழங்கவேண்டும். உடுப்பிட்டி எம். பி. திரு. த இராசலிங்கம் உரையாற்றுகையில்குறிப்பிட்டதாவது,


பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வடமராட்சியில் மட்டுமல்ல இலங்கையிலேயேமிகப் பிரபல்யம்பெற்ற கல்லூரியாகும். சர்வதேச ரீதியிலே பல சாதனைகளை நிலைநாட்டியது. எமது பகுதி அபிவிருத்திகளில் நாம் அதிகவனம் செலுத்த வேண்டும். கல்வித்துறை அபிவிருத்தி மிக முக்கியமானதாகும், இதனைக்கருத்திற்கொண்டே உடுப்பிட்டித் தொகுதிப் பாடசாலைகளில் பல பாடசாலைகளில் மாடிக்கட்டிடங்களைக் கட்டவும் தேவரையாளி இந்துக்கல்லூரியில் தொழில் நுட்பக் கல்விப் பகுதியை ஆரம்பிக்கவும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இராஜலிங்க மணிமண்டபத்தை அமைக்கவும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தேன்.

இக்கல்லூரியில் வகுப்பறை பற்றுக்குறை கட்டிடப்பற்றுக்குறை. தொழில்கூடப்பற்றுக்குறையாகிய பற்றுக்குறைகளின் மத்தியிலும் பல சாதனைகளை புரிந்துவருவது பாராட்டப்பட வேண்டியதாகும்."

கடந்த1970ம் ஆண்டு1977ம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் கல்வியமைச்சின் நிர்வாகச் செயலாளராக இருந்த திரு உடகம கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் எளிமையையும் கட்டிடப் பற்றுக் குறைகளையும் பல வசதிகளைக் கொண்ட கல்லூரிகளுடன் ஒப்பிட்டு இக் கல்லூரியின் மேம்பாடு பற்றி எடுத்துக் கூறியிருந்தார்.

பாடசாலைகளின் அபிவிருத்தியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர் சங்கங்கள் ஆசிரியர்கள் பெற்றோர் ஆகியோர் கூட்டுறவு முறையில் இணைந்துசெயற்பட வேண்டும்.

பாடசாலை ஒரு மாதிரிச் சமுதாயமாகும், எனவே இச் சமுதாயம் சிறப்பாக உருவாக்கப்படும் போதுதான் எதிர்காலம் சுபிட்சமடையும்.



கைதடி சைவச் சிறுவர் இல்லக் குழந்தைகளுக்கு மிக்கவைத் அதிபரால் இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்ட திருமுறை வகுப்பை, தைப்பூசத் தினத்தன்று ஆசிரியர் ஓதுவார்மூர்த்தி வி. ரி. வி. சுப்பிரமணியத்திற்கு தானம் வழங்கி வகுப்பை ஆரம்பித்து வைக்கிறார்.

### மினிபஸ்ஸுக்கு அடித்துச் சேதம்

## 5 சந்தேகநபர்கள் மீது குற்றப்பத்திரம் தாக்கல்

[மாவிட்டபுரம்]

மினி பஸ்ஸை அடித்து உடைத்து சேதம்விளைவித்தது தொடர்பாக 5 சந்தேகநபர்கள் மீது குற்றப்பத்திரம் தாக்கல்செய்யப்பட்டுள்ளது.

மாதகலைச் சேர்ந்த செல்லர் நவரத்தினராசா என்பவர் தமது மினி பஸ்ஸை வீட்டில் நிறுத்திவைத்திருந்த சமயம் அங்கு சென்ற கோஷ்டியொன்று மினிபஸ்ஸை அடித்து உடைத்தும், அவரைத் தாக்கியும் சேதம் விளைவித்திருந்தது

இச்சம்பவம் தொடர்பாக காங்கேசன்துறைப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்ட மாதகலைச் சேர்ந்த சி. சற்குணராஜா, த பீற்றர், சி. தர்மகுலசிங்கம், சி. ஆனந்தராஜா, மிக்கேல்பிள்ளை நவம் ஆகிய சந்தேகநபர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஏற்கனவே ஆஜர்செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டிருந்தனர்.

இந்நபர்கள் மீது 29ஸ்ரீ6432 இலக்க மினிபஸ்ஸை அடித்து உடைத்து 60 ஆயிரம் ரூபா நஷ்டம் விளைவித்தது. அதன் உரிமையாளரை தாக்கி இறு காயம் விளைவித்தது. ஆகிய குற்றங்களைச் சுமத்தி மல்லாகம் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல்செய்யப்பட்டுள்ளது

காங்கேசன்துறைப் பொலிஸார் இக்குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்ததையடுத்து மேற்படி நபர்கள் தாம் சுற்றவாளிகள் எனக் கூறவே நீதிபதி திரு. சீ வி விக்னேஸ்வரன் வழக்கை விசாரிப்பதற்காக மே மாதம் 30ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

மேற்படி சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் ஆர். ஜே. செல்வரத்தினம், திருமதி கமலா சொர்ணலிங்கம் ஆகியோர் ஆஜராகினர்.


சகலவிதமான மணிக்கூடுகளையும்
உத்தரவாதத்துடன் திருத்திக்கொள்ளவும்
புதிய மணிக்கூடுகளை வாங்கிக்கொள்ளவும்

டில்கா வாச் வேக்ஸ்
Dilka Watch Works
(Opposite Bus stand)
(பஸ்நிலைய எதிர் மேல்மாடி)
யாழ்ப்பாணம்.
போன் : 24174.

# உபாலி பிரயாணம் செய்த விமானம் இலங்கைக்கு அருகில் விழுந்திருக்கலாம்!

## இலங்கை விமானப்படை விமானமும் தேடுதல் வேட்டையில் ஈடுபடும்

(கொழும்பு)

இலங்கையின் கோடீஸ்வரரும், பிரபல தொழிலதிபருமான திரு. உபாலி விஜேவர்த்தன உட்பட 6 பேர் பிரயாணம் செய்த விமானத்தைத் தேடி தேடுதல் வேட்டையிலீடுபடும் பொருட்டு இலங்கை விமானப் படையின் விமானமொன்று நாட்டின் கிழக்குப் பகுதியிலுள்ள சமுத்திரத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விமானப்படை தளபதி டிக் பெரேரா தெரிவித்தார்.

*பல்கேரியா விமானமொன்றிலிருந்து கிடைத்த தகவல்களின் பிரகாரம் உபாலியின் தனிப்பட்ட 'ஜெட்' விமானம் இலங்கைக்கு மிக அருகில் விழுந்திருக்கலாமென நம்பப்படுகிறது.*

இவ்விமானம் இலங்கையிலிருந்து 430 மைல் தூரத்தில் விழுந்திருக்கலாமென தெரிவிக்கப்பட்டது,

விமானம் சமுத்திரத்தின் ஏதோ ஒருபகுதியில் விழுந்திருக்கலாமென்றும், அதனால் விமானத்தில் பிரயாணம் செய்தவர்கள் உயிரோடு இருக்கலாமென்றும் நம்பப்படுகிறது.

இலங்கை விமானப்படையின் மற்றுமொரு விமானமும் உபாலியின் விமானத்தைத்தேடும் வேட்டையில் ஈடுபடும் பொருட்டு அனுப்பி வைக்கப்படுமென்றும் விமானப்படைத்தளபதி டிக் பெரேரா தெரிவித்துள்ளார்.

மலேசியாவின் மேற்கு கடற்பிராந்தியத்தில் விமானத்தின் எண்ணெய்க்கசிவு காணப்படுவதால் உபாலியின் விமானம் அப்பகுதியில் விழுந்திருக்கலாமென்று மலேசியா விமானத்துறை நிபுணரொருவர் கருதித் தெரிவித்தார். இக்கசிவு விமானத்தின் எண்ணெய்க்கசிவு இல்லையெனப் பின்னர் வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

உபாலி பிரயாணம் செய்த விமானம் காணாமல்போனது பற்றி இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் வாஷிங்டனிலுள்ள அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்

இவ்விமானத்தைத் தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் மலேசியா, இந்தோனேஷியா விமானங்களுடன் அமெரிக்கத் தேடுதல் அணியும் நேற்று ஈடுபட்டிருந்தமை தெரிந்ததே.

இத்தேடுதல் அணிகள் இன்று காலை மீண்டும் தமது தேடுதல் பணியை மேற்கொள்ளவுள்ளன. (வெ)

## இந்திய அமைச்சரவை மீண்டும் மாற்றியமைப்பு!

புதுடில்லி, பெப். 15

இந்திய பிரதமமந்திரி திருமதி இந்திராகாந்தி மூன்று வார காலத்திற்குள் நேற்று இரண்டாவது தடவையாக தனது அமைச்சரவையை மாற்றியமைத்துள்ளார்.

தகவல்துறை அமைச்சர் திரு. ஏ. பி. சர்மாவும், சிவில் அமைச்சர் திரு பீஷ்மநாராயணசிங்கும் மத்திய அமைச்சரவையிலிருந்து ராஜினாமாச் செய்துள்ளனர்.

சுரங்கத்துறை அமைச்சராக திரு. சாத்பேயும் மற்றும் 6 ஸ்டேட் அமைச்சர்களும் பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியினால் நேற்று நியமிக்கப்பட்டனர்.

மக்களின் ஆதரவைத் திரட்டும் முகமாகவும், மத்திய அரசின் நிர்வாகத்தை துரிதமாக இயங்கச்செய்யும் பொருட்டும் திருமதி காந்தி இந்த அமைச்சரவை மாற்றங்களைச் செய்திருக்கலாமென அரசியல் அவதானிகள் கருதுகின்றனர். (வெ)

## பொலிசாருக்கு எதிராக பெண்கள் கோஷம்

இஸ்லாமாபாத், பெ. 15

லாகூரில் இடம்பெற்ற பெண்கள் ஆர்ப்பாட்டத்தின் போது பாகிஸ்தானிய பொலிசார் மேற்கொண்ட கடுமையான நடவடிக்கைகளை ஆட்சேபித்து, நேற்று 100 பெண்கள் கராச்சியில் கூடி கோஷமிட்டனர். (வெ)

## மாணவர் - பொலிசார் கைகலப்பு!

### ஒருவர் பலி!

டாக்கா, பெப். 15

பங்களாதேஷில் நேற்று பல்கலைக்கழக மாணவர்களுக்கும் பொலிசாருக்குமிடையே நடந்த கைகலப்பில் மாணவர் ஒருவர் பலியானார். 100 பேர் காயமடைந்தனர்.

பங்களாதேஷ் அரசின் இராணுவச் சட்டத்தையும், கல்விக் கொள்கையையும் எதிர்த்து மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தியபோதே இக்கைகலப்பு இடம் பெற்றது.

டாக்கா பல்கலைக்கழகத்திலிருந்து பெருந்தொகையான மாணவர்களை வெளியேறாதவாறு பொலிசார் தடுத்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [வெ]

## அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு

புதுடில்லி, பெப். 15

புதுடில்லியில் அடுத்தமாதம் 7ம் திகதி ஆரம்பமாகவுள்ள அணிசேரா நாடுகளின் உச்சி மகாநாட்டில் பல்வேறு நாடுகளின் தலைவர்களும், மன்னர்களும், அதிபர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இம் மகாநாட்டில் 65 நாடுகளின் 4,000 பிரதிநிதிகளும், 1,000 தகவல் தொடர்பு அதிகாரிகளும் கலந்துகொள்ளவுள்ளதாக மகாநாட்டுக்குப் பொறுப்பான இந்தியப் பிரதிநிதி தெரிவித்தார்.

## முத்தரப்பு பேச்சுவார்த்தை

புதுடில்லி, பெப். 15

இந்திய மத்திய அமைச்சர்கள், எதிர்க்கட்சித்தலைவர்கள், அகாலிகள் ஆகியோருக்கிடையிலான முத்தரப்பு பேச்சுவார்த்தை மீண்டும் இன்று புதுடில்லியில் ஆரம்பமாகவுள்ளது.

இது தொடர்பாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. பி. வி. சேத்தி விடுத்த அழைப்பை அகாலிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். (வெ)

## "தனித்தமிழ் நாட்டுக்கே நாம் திரும்புவோம்"

### கனடா சென்ற தமிழ் இளைஞர்கள் கருத்து

ஒட்டாவா பெப் 14

''தமிழர்களுக்கென்று உருவாகும் பிரதேசத்திற்கே தனித் தமிழீழத்துக்கு நாம் இனிச் செல்வோமே தவிர இலங்கைக்கு ஒரு போதும் திரும்பமாட்டோம்''.

இவ்வாறு கனடாவிற்கு வேலைவாய்ப்புத்தேடிச் சென்றுள்ள தமிழ் இளைஞர்கள் தெரிவித்ததாக கனடா தலைநகரிலிருந்து வெளிவரும் 'தகஸெட்' என்ற பத்திரிகையில் ஒரு கட்டுரை வெளியாகியுள்ளது.

'மொன்றியலுக்கு இலங்கையர் வந்து பணப் பிரச்னைகளைச் சந்திக்கின்றனர்' என்ற தலைப்பில் இக்கட்டுரை வெளிவந்திருந்தது. மேற்கு ஜெர்மனியிலிருந்து கனடாவிற்கு குடிபெயர்ந்ததாகக் கூறப்பட்ட மூவரின் படங்களையும் இக்கட்டுரை கொண்டிருந்தது.

இந்த வருட . ஆரம்பத்தில் சுமார் 200 இலங்கையர்கள் மே. ஜெர்மனியில் குடியேற்றச்சட்டங்கள் கடுமையாக்கப்பட்டதையடுத்து கனடா வந்துள்ளனரென்று கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளுக்குநாள் இவ்வாறு வருவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதாகவும் இவர்கள் கனடிய அரசிடமிருந்து அதிக உதவியை எதிர்பார்க்கமுடியாதென்றும், அகதிகளுக்கென வழங்கப்படும் குடியிருப்புக்கான பணத்தை மட்டும் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் இக்கட்டுரை அறிவித்துள்ளது.

தனபாலன் பரமநாதன் என்ற 32 வயது நபர், மேற்கு ஜெர்மனியிலுள்ள 10,000 இலங்கையர்களில் ஒரு சதவீதமானவர்களுக்கு மட்டும் அரசியல் அகதிகளாக அங்கிருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்ததாகவும் அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கி]

## "பூரணசுதந்திரம்பெறும்வரை எமதுமக்களின் தேவைகளைப் புறக்கணித்து விடமுடியாது"

### மாதகல் கூட்டத்தில் அமிர்தலிங்கம்

(பண்டத்தரிப்பு)

''உலகவங்கியினதும் மற்றும் வெளிநாடுகளினதும் நிதி உதவியோடு குருநாகல், மாத்தறை, அம்பாறை போன்ற பகுதிகளின் வீதிகள், குளங்கள், மின்சாரத்தேவைகள் எல்லாம் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இவ்வாறு தென்னிலங்கையில் கோடிக் கணக்கில் செலவு செய்யப்பட்டு அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகையில் எமது பகுதிகளுக்கு வழமையாக தொகுதி எம். பிக்களுக்கு வழங்கப்பட்டுவரும் 25 இலட்சம் ரூபாவோடு அரச நிறுத்தி, எமது பகுதிகளை புறக்கணித்து வருகின்றது,'' இவ்வாறு மாதகல் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையின் புனரமைப்பு பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை தொகுதி எம். பியுமான திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

மாதகல் கிளைத்தலைவர் திரு. பி. ஜோசப் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

''பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்திலிருந்து வழங்கப்பட்ட இந்த 25 இலட்சம் ரூபாவைக்கூட வடபகுதி எம், பிக்கள் தங்கள் தொகுதி அபிவிருத்தி வேலைகளை செய்வதற்கு முற்றுமுழுதாக பயன்படுத்த முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

எமதுமாவட்டத்தின் முன்னுரிமைத் திட்டத்தில் இடம் பெற்றுள்ள பொதுவான அபிவிருத்தி வேலைகளுக்கும் இந்த நிதியிலிருந்தே நாம் ஒதுக்கீடு செய்துள்ளோம். மகாதேவா தாம்போதிக்கும், யாழ்ப்பா

[6-ம் பக்கம் பார்க்க]

## அசாமில் அமைதியான வாக்களிப்பு

புதுடில்லி, பெப். 15

அசாம் மாநிலத்தில் நேற்று 61 தொகுதிகளில் முதலாவது கட்ட வாக்களிப்பு அமைதியாக நடைபெற்றது. (வெ)

## ப. உ. சண்முகம் ராஜினமா

சென்னை, பெப். 15

அ. தி. மு. க. பொதுச்செயலாளர் திரு. ப. உ. சண்முகம் தமிழ்நாடு சட்டமேலவை உறுப்பினர் பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார்.

இவரின் இடத்திற்கு தேர்தல் நடத்தப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வெ)

## பீகாரில் இரும்புப்படிவுகள்

புதுடில்லி, பெப். 15

பீகார் மாநிலத்தில் இரும்புப் படிவுகள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (வெ)

## தமிழகமுதல்வர் எம்.ஜி.ஆர். புதுடில்லி பயணம்

### அரிசி ஒதுக்கீடு குறித்தும் பேச்சுவார்த்தை நடத்துவார்

சென்னை, பெப். 15

இந்திய மத்திய அரசினால் தமிழ் நாட்டுக்கு அரிசி ஒதுக்கீடு செய்வது குறித்து மத்திய அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் நேற்று புதுடில்லி பயணமானார்.

இவர் அங்கு பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தியையும், மத்திய விவசாய அமைச்சர் திரு. ராவ் பிரேந்திரசிங்கையும் சந்தித்து இதுதொடர்பாகப்பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். (வெ)

### மணிவாக்கு

சேவையாற்றுவதென்பது அழகான செயல்தான், அதனை மகிழ்ச்சியோடும், முழுமனதோடும் சுதந்திரமான எண்ணத்தோடும் செய்ய வேண்டும்.

—பேர்ள் எஸ். பக்

## நமது நோக்கு

# ராஜினாமாவும் உபதேர்தலும்

தேர்தல் தொகுதியொன்றில் மக்கள் முன் சென்று, அவர்களின் ஆதரவைப் பெற்று பாராளுமன்றத்துக்குத் தெரிவாக முடியாத ஒருவர், அரசின் உயர்மட்ட செல்வாக்கைப் பெற்றிருப்பாராகில் உறுப்பினராக மட்டுமல்ல அமைச்சராக அமர்ந்துகொள்வதற்கும் சோல்பரி அரசமைப்பின் கீழ் 'மூதவை' நடைமுறையில் இருந்த காலத்தில் வாய்ப்பிருந்தது.

அந்தச்சபை அரசின் துரித வேலைத்திட்டங்களுக்கு முட்டுக்கட்டையாய் இருப்பதாகக்கருதி முன்னைய ஆட்சியாளர்கள் அதை ஒழித்துக் கட்டினார்கள். முதன்முதல் அரசியலில் பிரவேசிக்க திருமதி அம்மையாருக்குக்கூட இந்தச்சபையே கைகொடுத்து உதவியது. என்றாலும், பின்னர் அச்சபையையே ஒழித்துக்கட்டுவதற்கு அவர் உடந்தையாயிருந்தது வேறுகதை.

மக்கள் முன் செல்லாமலே பாராளுமன்றம் செல்லவும் அமைச்சராகப் பதவியேற்றுக் கொள்ளவும் இன்றைய ஐக்கியதேசியக்கட்சி அரசமைப்பில் புதுமாதிரியான வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தப்பட்டு அதற்கான முன்மாதிரியும் நிலைநாட்டப்பட்டுள்ளதை கடந்தவாரம் அவதானித்தோம்.

ஓர் அமைச்சரும் 6 பிரதி அமைச்சர்களும் உட்பட 17 பாராளுமன்ற உறுப்பினர்கள் ராஜினாமாச் செய்தார்கள். ஜனாதிபதி தேர்தலிலும், அடுத்து வந்த பொதுசன வாக்கெடுப்பிலும் தமது தொகுதிகளில் கட்சிவேட்பாளர் வெற்றி பெறும் அளவுக்கு வாக்குகள் கிடைக்காமல் போனதையடுத்தே இவர்கள் பதவி துறந்ததாகவும் இந்த இடங்களுக்கு புதிதாக உபதேர்தல்கள் நடைபெறவிருப்பதாகவும் கூறப்படுகின்றது. உபதேர்தல்களை நடத்துவதற்கான திருத்தம் ஒன்றும் விரைவில் அரசமைப்பில் செய்யப்படவிருக்கிறதாம்.

மக்கள் கருத்துக்கு அரசு எவ்வளவுதூரம் மதிப்பளிக்கிறதென்பதையே இது எடுத்துக்காட்டுகிறது என்று பெருமையாகப் பேசப்படுகின்றது.

தெனிநுவர தொகுதியில் மக்கள் செல்வாக்கை இழந்துவிட்ட நிதியமைச்சர் திரு ரொனி டி மெல் அவர்கள் அந்தத் தொகுதியின் உறுப்பினர்பதவியைத் துறந்ததும் கூட அந்தவகையில் மிகவும் சிலாக்கியமான செயல்தான்! ஆனால் அடுத்த சில தினங்களிலேயே ஏற்கனவே காலியாக விருந்த புளத்சிங்கள தொகுதிக்கு தேர்தல் நடத்தப்படாமலே அவர் நியமனம் பெற்றுவிட்டார். அத்துடன் மீண்டும் நிதி அமைச்சர் பதவியிலும் அமர்ந்து கொண்டார்.

இத்தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றிருந்தாலும் திரு ரொனி டி மெல்லை அத்தொகுதி மக்கள் ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்பதை தேர்தல் நடத்தாமலே எங்ஙனம் தீர்மானிப்பது!

மேலும், பதவி துறந்துள்ள ஏனைய 17 பேரும் கூட இதே அடிப்படையில் வெவ்வேறு தொகுதிகளுக்கு தாம் நியமிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதும் சாத்தியமே. அல்லது உபதேர்தல் நடத்தப்படும் பட்சத்தில் தொகுதி மாறி தொகுதிக்கு இவர்கள் வேட்பாளர்களாக நியமிக்கப்படவேண்டும் என்றும் கோரலாம்.

எவ்வாறாயினும் ஒரு தொகுதியில் மக்கள் செல்வாக்கை இழப்பவர் இன்னொரு தொகுதிக்கு அத்தொகுதி மக்களின் சம்மதத்தைப் பெறாமல் பிரதிநிதியாக நியமிக்கப்படுவதென்பது ஜனநாயக சம்பிரதாயங்களுக்கு உகந்ததாய் இருக்கும் எனக்கூற முடியாது!

ஜனாதிபதி தேர்தல், பொதுஜன வாக்கெடுப்பு இரண்டிலும் தமது தொகுதிகளில் செல்வாக்கிழந்துவிட்ட பாராளுமன்றஉறுப்பினர்கள் தம் பதவிகளைத் துறந்து, அத்தொகுதிகளில் மீண்டும் உபதேர்தல் நடத்தப்படுமானால் அதே கொள்கையை அரசு தமிழ்ப் பிரதேசங்களிலும் குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்த பின் நிற்பது ஏன் என்ற ஒரு கேள்வியும் எழுந்துள்ளது.

கடந்த வாரம் கொழும்பில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயற்குழுவும் இந்த விடயத்தைப் பற்றி விடுத்துள்ள அறிக்கையில் தமிழ்ப் பிரதேசங்கள் தொடர்பாக அரசு பாரபட்சம் காட்டுவதாகக் கண்டித்திருக்கிறது.

பொதுசன வாக்கெடுப்பின் தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டே மேற்குறித்த ராஜினாமாக்கள் இடம் பெற்றிருப்பது உண்மையாயின் கிழக்குமாகாண விடயத்திலும் அரசு அக்கொள்கையைச் செயல்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறது.

ஜனநாயகம் வாயளவில் மட்டும் பேசப்படும் விடயமல்ல. நடைமுறையிலும் அது செயல்படவேண்டும், இல்லையெனில் அச் சொல்லுக்கே அர்த்தம் இல்லாமல் போய்விடும்!

# உபாலி — தொழில் துறையில் சரித்திரம் படைத்தவர்

இலங்கையில் மட்டுமல்ல, உலக அரங்கிலேயே பெரும் கோடீஸ்வரராகவும், தொழிலதிபராகவும் திகழ்ந்த உபாலி விஜேவர்த்தனாவைக் காணவில்லை என்ற செய்திதான் இப்போது எங்கும் பரபரப்பாகப் பேசப்படுகிறது!

நமது நாட்டு ஆட்சியாளர்களோடு, சகல மட்டத்திலுமுள்ள மக்களையும் 'உபாலி' பற்றிய செய்தி ஒரு கலக்குக் கலக்கிவிட்டது!

காலைச்சாப்பாட்டை ஒரு நாட்டிலும், மத்தியான விருந்தை இன்னொரு நாட்டிலும், இரவு உணவை மற்றொரு நாட்டிலும் உண்ணுபவர் என்று சிலரைப் பற்றி நகைச்சுவையாகச் சொல்வதுண்டு. உபாலியைப்பொறுத்தளவில் இது பொருந்தும்! அந்தளவுக்கு உலகத்தின் பல நாடுகளிலும் தொழில் தொடர்புகளை வைத்துக் கொண்டிருந்தார்!

—எங்கெல்லாமோ உலக நாடுகளுக்கெல்லாம் பறந்து சென்ற இந்த மனிதருக்கு இப்படி ஒரு துர்ப்பாக்கியநிகழ்ச்சி நடந்துவிட்டது!

சொந்த விமானக்கம்பனியை இலங்கையில் வைத்து உள்ளூர் விமான சேவைகளை நடாத்தி வரும் உபாலி, தனக்குச் சொந்தமான 'ஜெட்' விமானத்தில் தனது உதவியாளர்களுடன் பறந்து வந்து கொண்டிருந்தபோது அந்த விமானம் 'என்ன ஆனதோ' என்று எங்கோ போய் 'மர்ம' மாகிவிட்டது!

பன்னிரண்டு பேர் அமர்ந்து செல்லக்கூடிய அழகான விமானம்! கடந்த ஞாயிறு மலேஷியா, கோலாம்பூர் விமான நிலையத்தில் இலங்கை நேரப்படி இரவு 5 மணிக்கு உபாலி விமானத்தில் புறப்பட்டார்! ஏறத்தாழ அன்று இரவு பத்து மணிக்கெல்லாம் கட்டுநாயக்கா விமான நிலையம் வந்து சேர்ந்திருக்கவேண்டும்.

-விமானம் புறப்பட்ட பதினைந்து நிமிட நேரத்துக்குப் பிறகு உபாலி விமானத்துடன் கோலாலம்பூர் 'சுபாங்' விமான நிலையத்துடனிருந்த 'ராடர்' தொடர்பு அறுந்து விட்டது!

அவ்வளவுதான் கதை!

### பயணம் செய்தோர்

நாற்பத்தைந்து வயதான உபாலியுடன் விமானத்தில் பயணம் செய்தவர்கள் மற்றையோர் ஐந்து பேர், ஒருவர் மலேஷியாத் தமிழர்!

### 'ஷர்மினி'

அனேகமாக உபாலியுடன் பறந்து செல்லும் இளைஞரான ஆனந்தா பெலி முகாந்திரம் இவர்களில் ஒருவர், உபாலி கம்பனியின் வர்த்தக இயக்குனராக இருப்பவர்! வழக்கறிஞரான மலேஷியாக்காரர் எஸ். எம். இரத்தினம் உபாலியுடன் கொழும்புக்கு கூட வந்தார். மலேஷியாவில் உபாலியின் வியாபாரங்களுக்கு பொறுப்பாக இருப்பவர்.

மற்றைய மூவரும் விமான ஓட்டிகள்! காப்டன் நோயல் ஆனந்தப்பா, விமானி சிட்னி சொய்ஸா, விமானி சேனநாயக்கா ஆகிய மூவருமே இவர்கள்!

விமானம் புறப்படும்போது மிக நல்ல நிலையிலிருந்தது! ஆனால் என்ன நடந்ததோ?

### உபாலி வளர்ச்சி

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு மைத்துனரான உபாலி, முன்னாள் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு மருமகன்! திருமதி ஸ்ரீமாவோவின் அண்ணன் திரு. சீவலிரத்வத்தையின் மகளான லக்மினியை மணமுடித்தவர்!

'கேம்பிரிட்'ஜில் படித்துப்பட்டம்பெற்றவர் உபாலி! பொருளாதாரப்பட்டதாரி என்பதனைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்!

இருபத்திரண்டு ஆண்டுகளுக்குமுன்னர் அவரது தொழில்துறை வாழ்வு ஆரம்பமானது.

லிவர் பிரதர்ஸில் நிர்வாகப் பயிற்சியைப் பெற்றார். சில குற்றச்சாட்டுகளை இவர்மீது நிர்வாகம் சாட்டியதால், தனது பதவியைத் 'தூக்கி' எறிந்துவிட்டு 1961-ம் ஆண்டு 4,000 யு. எஸ். டாலர்களுடன் சொந்த வியாபாரத்தை ஆரம்பித்தார்! தோட்டச் சொந்தக்காரரான தனது தந்தையின் செல்வாக்கோடு, "வங்குரோத்தில்" போய்க்கொண்டிருந்த நண்பர்ஒருவரது தொழிற்சாலையொன்றைப் பொறுப்பேற்றுக்கொண்டார்!

'மக்கள் வங்கி'யில் கடனுதவி பெற்று, 1963ம் ஆண்டு பிரிட்டனிடமிருந்து இயந்திர உபகரணங்களைப் பெற்று, 'டெல்ரா' 'சாக்லட்'தொழிற்சாலையை ஆரம்பித்தார்!

1966ஆம் ஆண்டு உபாலியின் உயர்ச்சியில் ஓர் புதிய கட்டம் அவரது 'சாக்லட்'விற்பனையில் ஒருபெரும் சாதனையைஏற்படுத்தியது!150 000 யு. எஸ். டாலர்களுக்கு வருடம் உபாலி 'சாக்லட்' விற்பனையாகிறது. உலகமெங்கும் விற்பனை செய்யக்கூடிய தரத்துக்கு அது இருக்கிறது! வியாபார ரகசியங்களையும் முற்று முழுதாகக் கற்றுக்கொண்டார் உபாலி!

இதே நேரம், இலங்கையிலேயே ட்ரான்ஸிஸ்டர் வானொலிகளைத் தயாரிக்கும் அனுமதியை உபாலி பெற்றார்.

4,000 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தை மலேஷியாவில் வாங்கி, அங்கு தனது வியாபாரத்தை விஸ்தரித்தார்! இலங்கையிலும் தேயிலை, ரப்பர் தோட்டங்கள் மூலம் பெரும் லாபத்தை ஈட்டினார்.

'உபாலி குறூப்' என்ற பெரும் வியாபார ஸ்தாபனமாகத் திகழும் பல கிளைகளையும், பல வியாபாரங்களையும் தனதாக்கிக்கொண்டு, செல்வாக்குள்ள மனிதராகத் திகழும் உபாலி, பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் முன்னாள் தலைவராக இருந்த பெருமைக்குரியவராவார்.

### கார்கள் உற்பத்தி

உபாலி பியட் கார்களைப் பார்த்துப் பலரும் பெருமைப்பட்டிருக்கிறார்கள்! இந்த நாட்டில், காரைக்கூட உற்பத்தி செய்யலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியவர் உபாலி! 'உபாலி குறூப்,புக்கு வருடம் 5 கோடி யு. எஸ். டாலர் லாபம் கிடைப்பதாக ஒரு அறிக்கை கூறுகிறது. இது 'கிறுனிட் சென்றல்' என்ற உபாலியின் தேயிலை, ரப்பர் வியாபாரத்தின் லாபம் தவிர்த்தது!

5 கோடி யு. எஸ். டாலர்களைச் சொத்தாகக் கொண்டுள்ள உபாலியின்கீழ், 33,000 ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள்!

### சவாரிக் குதிரைகள்

இருபத்தி மூன்று சவாரிக் குதிரைகளைசொந்தமாக வைத்திருக்கிறார் உபாலி! அயர்லாந்து, சிங்கப்பூர், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் பல பந்தயங்களில் உபாலியின் பெறுமதி வாய்ந்த குதிரைகள் போட்டிகளில் கலந்து கொண்டு, பல வெற்றிகளைத் தேடிக் கொடுத்திருக்கின்றன!

இலங்கையில் முன்னணியில் நிற்கக்கூடிய வகையில் நவீனமயமாக்கப்பட்ட அச்சுக்கூடத்தோடு ஆங்கில, சிங்கள தினசரி பத்திரிகைகளை ஆரம்பித்தார். தமிழ் தினசரி ஒன்றையும் ஆரம்பிக்கவேண்டுமென்ற அவா அவருக்கு இருந்தது.

உபாலி ஆட்சியாளரில் சிலருக்குப் பெருத்த தலையிடியைக் கொடுத்துக்கொண்டிருந்தவர்!

### ஜே. ஆரின் அன்புக்குரியவர்

எது எப்படியிருந்த போதிலும், ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனாவின் அன்புக்குரியராக இருந்தார்! உபாலி சம்பந்தப்பட்ட பரபரப்பான செய்தி, அவரை மிகவும்பாதிப்படையவைத்து விட்டது!

தொழில்துறை சம்பந்தப்பட்ட விவகாரங்களில், உபாலி பிரச்னைக்குரியவராக ஆட்சியாளர்கள் சிலருக்கு இருந்த போதிலும், அவர் இந்நாட்டின்பெருமையை உலக அரங்கில் உயர்த்தியவர்!

உலக சஞ்சிகைகளில், அவரது விளம்பரங்கள் மட்டுமல்ல, அவரது பேட்டிகள் வெளிவந்து நாட்டின் பெருமையை உயர்த்தியிருக்கிறது.

'உபாலி குறூப்'என்றதனது நிறுவனத்தில், தமிழர்கள் பலருக்கு உயர்பதவிகள் வழங்கி அவர்கள் ஆலோசனைகளை கேட்டு, அந்த வழியில் நடந்திருக்கிறார் உபாலி! அவருக்குக் குழந்தைகள் இல்லை.

[8-ம் பக்கம் பார்க்க]

### நெடுந்தீவுக்கும் கொத்தணிப் பாடசாலைமுறை?

[வண்ணார்பண்ணை]

நெடுந்தீவுக்கும் கொத்தணிப்பாடசாலை முறையைபரீட்சார்த்தமாக நடைமுறைக்குக் கொண்டுவருமாறு நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் திரு சிவசங்கரப்பிள்ளை வடபிராந்திய கல்விப் பணிப்பாளரைக் கோரியுள்ளார்.

நெடுந்தீவில் உள்ள பத்துப் பாடசாலைகளையும் உள்ளடக்கி இப்பகுதியில் கொத்தணிப்பாடசாலை முறையை நடைமுறைக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு அக்கோரிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளன.

தவக்கால நற்சிந்தனை (1)



### கடவுளோடும் அயலாரோடும் ஒப்புரவாகுங்கள்

தவக்காலம் வந்துவிட்டது இது இன்று விபூதிப் புதனுடன் ஆரம்பமாகிறது. இக்காலம் செபம், தபம், தியான பக்தி முயற்சிகள் நிறைந்த ஒரு காலமாகும். இக்காலத்தில் நாம் ஆண்டவரோடும் அயலாரோடும் ஒரு அன்பு உறவில் ஒப்புரவாக அழைக்கப்படுகிறோம். பாவத்தின் கோரப்பிடிகளில் வாழ்ந்த நாம் நம் பாவ இதயங்களைக் கிழித்து ஆண்டவரிடம் திரும்பி வருவோம். நாம் எல்லாரும் ஒரே அன்பின் குடும்பமாக செபத்திலும், தபத்திலும் நேரத்தை செலவிடுவோம். மற்றவர்கள் பார்க்கவேண்டுமென்று செபிக்காது நமது மன மாற்றத்திற்கும், அயலாரின் மனமாற்றத்திற்கும் செபிப்போம். வெளிவேடமற்ற நம் செபம் நம்மை கடவுளோடும் அயலாரோடும் ஒப்புரவாக்கும்.

அருட்செல்வன் .ம.ரூபன்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# கிளிநொச்சி செய்திகள்

கே. வி. திருலோகமூர்த்தி

## மாணவர் பாதிப்பு

ஆனையிறவு அரசினர் பாடசாலையில் போதிய தளபாட வசதியில்லாமையால் மாணவர்கள் நிலத்திலிருந்தே கல்வி கற்கின்றனர். இப்பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறையும் நிலவுகிறது. பாடசாலை அபிவிருத்தியில் கல்விப் பகுதியினரும் அக்கறை காட்டுவதில்லை எனவும் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமைச்சர் அக்கறை

கிளிநொச்சி தொண்டமான் நகரின் அபிவிருத்தியில் அமைச்சர் திரு. சௌ. தொண்டமான் பெரும் அக்கறைகாட்டிவருகிறார். இக்கிராமத்தில் பல அபிவிருத்தி முயற்சிகள் மேற்கொள்ளவும் அமைச்சர் திட்டமிட்டுள்ளதாக தொண்டமான் நகர் கிராம முன்னேற்றச் சங்கச் செயலாளர் திரு. எஸ் சபாரெத்தினம் தெரிவித்தார்.

## மக்கள் பாதிப்பு

கடந்த ஆண்டு இடம்பெற்ற வெள்ளப்பெருக்கின் போது வெள்ளத்தினால் அள்ளிச்செல்லப்பட்ட திருநகர் பாலம் திருத்தம் செய்யப்படாததால் மக்கள் பெரும் பாதிப்படைந்துள்ளதுடன் வாகனப்போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது.

## பழுதடைந்த யந்திரங்கள்

கிளிநொச்சி பிரதம தபால் நிலையத்திலுள்ள தொலைபேசி பரிவர்த்தனை நிலைய யந்திர சாதனங்கள் அடிக்கடி பழுதடைந்துவிடுகிறது. இதனால் இங்கு கடமையாற்றும் தொலைபேசி உத்தியோகத்தர்கள் அதிக சிரமமடைவதுடன் தொலைபேசி பாவனையாளர்களும் பாதிப்படைந்துள்ளனர். பல வருடகாலப் பழைமைவாய்ந்த யந்திர சாதனங்களே இங்கு உள்ளதாலே இந்நிலை எனவும் புதிய யந்திரங்கள் பொருத்தப்பட வேண்டியது அவசியமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## நோயாளர் கஷ்டம்

கிளிநொச்சி அரசினர் ஆஸ்பத்திரியின் 'அம்புலன்ஸ் வண்டி' பழுதடைந்த நிலையிலும் அதிகதூரம் செல்லமுடியாத நிலையிலும் உள்ளது. இதனால் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட வேண்டிய அவசர நோயாளர்களை ஏற்றிச்செல்ல யாழ்ப்பாணம், பருத்தித்துறை, தெல்லிப்பளை ஆகிய பகுதி அம்புலன்ஸ் வண்டிகளே வரவேண்டியுள்ளதால் நோயாளர்கள் மிகவும் கஷ்டமடைகின்றனர். அந்த வண்டிகளும் உரிய நேரத்தில் வந்துசேருவதில்லை எனவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

## கட்டிடவேலை இடைநிறுத்தம்

கிளிநொச்சி இ. போ. சபை டிப்போவின் புதிய அலுவலக கட்டிடவேலைகள் ஸ்தம்பித்த நிலையில் உள்ளன. இருவருடங்களுக்குமுன்பு இக்கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு அத்திவார வேலைகள் முடிவடைந்த நிலையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## தொலைபேசி வசதியில்லை

கிளிநொச்சி கொத்தணிப் பாடசாலைகள் அதிபர் அலுவலகத்திற்குத் தொலைபேசி வசதியும், அலுவலக உதவியாளர்களும் இல்லை என்று புகார் செய்யப்பட்டுள்ளது. கொத்தணி அதிபரே சகல வேலைகளையும் மேற்கொள்கிறார். தொலைபேசியின் அவசியத்தையும் காரியாலய உத்தியோகஸ்தர் தேவைபற்றியும் வலியுறுத்தி கல்விப் பகுதியினரிடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

## சிறுவர் கல்வி நிலையம்

கிளிநொச்சி 155-ம் கட்டை கிருஸ்ணபுரம் உள் அரங்க ஜெப ஆலயத்தினர் சிறுவர் கல்வி நிலையம் ஒன்றை இம்மாதம் 19-ந் திகதி ஆரம்பித்துவைக்கவுள்ளனர். ஆலய நிர்வாகி போதகர் எஸ். ஜோன் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் சமூகமாமணி இ. கிருஷ்ணராசா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்கிறார். சிறப்பு விருந்தினராக இ. தொ. காங்கிரஸ் கிளிநொச்சி பிரமுகர் எஸ். சுப்பிரமணியம் கலந்துகொள்கிறார்.

## அதிக விளைச்சல்

கிளிநொச்சியில் காலபோக அறுவடை நடைபெறுகிறது. விவசாய இலாகாவினர் எதிர்பார்த்ததைவிட இம்முறை அதிக விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## பஸ் நிலையம் இடமாற்றம்

கிளிநொச்சி மத்திய பஸ் நிலையத்தினை றொட்றிக்கோ விளையாட்டரங்கின் ஒரு பகுதிக்கு மாற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்று அண்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட உப அலுவலக நிர்வாகி, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, இ. போ. ச டிப்போ அத்தியட்சகர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## சமூகசேவகிக்கு அஞ்சலி

உருத்திரபுரம் பகுதியில் சமூக சமயப்பணி மேற்கொண்டுவந்த திருமதி யேசுநாயகம் கிறிஸ்ரினம்மா அமரராகியதையிட்டு உருத்திரபுரம் விளையாட்டுக் கழகத்தினர் அஞ்சலிச் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளனர். (க)

# கஷ்டமான பதவியை சிறப்புடன் வகித்தவர்

(யாழ்ப்பாணம்)

''கணக்காளர் பதவி மிகவும் கஷ்டமானதொரு பதவியாக இருந்தும் இதனை சிறப்பாகச் செய்ததோடு மட்டுமின்றி யாழ். மாவட்டத்து பாடசாலைகளின் அபிவிருத்தியிலும் ஆசிரியர் மாணவர் நலத்திலும் மிகவும் நாட்டமுடன் சேவைபுரிந்தவர் திரு. திருநாவுக்கரசு ஆவர்''

இவ்வாறு யாழ். கல்வித் திணைக்களக் கணக்காளராக இருந்து வவனியா மாவட்டத்துக்கு இடமாற்றலாகிச்சென்ற திரு. நா. திருநாவுக்கரசுவுக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடத்தப்பட்ட பிரிவுபசாரக்கூட்டத்தில் சிறப்புரை நிகழ்த்திய யாழ். மாவட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. ம. சிமியாம்பிள்ளை எடுத்துக்கூறினார்.

இப்பிரிவுபசாரம் திரு. த. காசிநாதன் தலைமையில் திரு. த. சிவபாதத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமானது.

திரு சிமியாம்பிள்ளை மேலும் பேசுகையில், திரு. திருநாவுக்கரசு வகித்த கடன் வழங்கு சபைத் தவிசாளர் பதவியை தாம்வகிப்பது கஷ்டமாக இருக்கிறதென்றும் அதற்கு யாழ் மாவட்ட ஆசிரியர் அனைவரும் பூரண ஒத்துழைப்புத்தருமாறும் கேட்டுக்கொண்டார்.

திரு திருநாவுக்கரசு கல்வி அமைச்சின் பிரதம கணக்காளராகப் பதவிஉயர்வுகிடைத்த போதும் அதனை ஏற்றுக்கொள்ளாது யாழ். மாவட்டக் கல்வித்திணைக்களக் கணக்காளராகவே இருக்கவிரும்பினாரென்றும் வவனியா மாவட்டம் சென்ற மறுதினமும் யாழ். கல்வித்திணைக்களக் கொடுப்பனவுகளுக்காக உடன் பணம் அனுப்பிவைக்குமாறு கேட்ட பெருந்தகையாளர் எனவும் கல்விஅமைச்சின் கணக்காளர் திரு. ராஜ் சுப்பிரமணியம் பேசும்போது குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் வட்டாரக் கல்வி அதிகாரிகள் திருவாளர்கள் எஸ். கணபதிப்பிள்ளை, கு. சோமசுந்தரம், வி. கே. ஈசுரபாதம், இ. க. குலசேகரம் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி ஏ. இராசரத்தினம், இ. த. ஆ. சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் ஆகியோரும் பாராட்டுரை வழங்கினார்கள்.

இ. த. ஆ. சங்க யாழ். மாவட்டச் செயலாளர் திரு. வே. சி. சிவபாலசிங்கம் நன்றி கூறினார். (மானி. நி.)

# ரூபவாஹினியில் இன்று

மாலை: 6-00 - இன்றைய நிகழ்ச்சிகள்பற்றியதொகுப்பு.

6 01-தேசியஇளைஞர்சேவை கரபந்தாட்டப்போட்டி.

6-30- நிர்வாக அமைப்பு பற்றிய சட்டம், கொள்கை விளக்கவுரை

6-45- என்னேப் பின் தொடருங்கள் [ஆங்கில மொழி போதனை பற்றிய நிகழ்ச்சி]

7-00-செய்தி மஞ்சரி [தமிழ்]

7-14-நடனைய நிகழ்ச்சிகள் பற்றிய தொகுப்பு.

7-15-விஞ்ஞான நிகழ்ச்சி.

8-15-செய்தி மஞ்சரி [சிங்களம்]

[8-ம் பக்கம் பார்க்க]

# 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



## சீனித்தம்பி மத்யூஸ்

பிறப்பு: 13-2-1952 இறப்பு: 16-2-1978

5-ம் ஆண்டு நினைவு அஞ்சலி யாழ்/அரசினர் வைத்தியசாலை ஆரோக்கியமாதா கோவிலில் (சு. ம. தி) அண்மையிலும் திரு. பிரான்சிஸ் டானியல் அண்மையிலும் கோவில் உதவியாளர் திரு எட்வேட் சார்பிலும் 16-2-1983ல் பிற்பகல் 5 மணிக்கு விபூதி திருநாள் பூசையில் செல்வன் சீனித்தம்பி மத்தியூஸ் உடைய ஆத்துமத்துக்கு ஒப்புக்கொடுக்கப்படும்.

அத்தருணம் அவரின் நண்பர், உறவினர், அவரை அறிந்தவர்களும் பங்கு பெறுமாறு வேண்டுகிறேன்.

கிருகை: 18-2-1983ல் பிற்பகல் 4 மணிக்கு பிப்ிலி சேமக்காலையில்

ஆராதனை நடைபெறும்.

மத்தியூசின் ஆசை அத்தான் யோனத்தன் ஜெசிந்தா அவர்களின் இல்லத்தில்

மத்தியான கிருகை

நடைபெறும்.

என் அன்பின் இரு கண் ஒளியே! ஐந்து ஆண்டு சென்றாலும் என் அருமை ஒரே ஒரு செல்வத்தை நினைந்து என் மனம் வேதனை அடைகிறது. என் நெஞ்சில் உமது எண்ணம் நெருப்புபோல் பறக்குது ஐயா, சகோதரிகள் செல்வமணி ஜெசிந்தா நீர் இல்லாமல் எமது வலது கரம் இல்லை ஐயா' நோவல், குமாரசாமி குடும்பத்தினர் மகன்மார் அருணசாந்தன், கேசவன், சிவகுமார் அருமை அண்ணா மோட்சத்தில் இருக்க பிரார்த்திக்கிறோம். அருமை மச்சான் ஜெயானந்தம் ஐந்து ஆண்டு சென்றாலும் நீர் பக்கத்தில் இருப்பது போல் இருக்குது ஐயா! மருமக்கள் லெபனன் குயின்ரன் குகன் குலேந்திரன், குலதீஸ் குமுதினி, ஜீவலோஜினி ஜீவானந்தன் எங்கள் அருமை மாமா மோட்சத்தில் இருக்க வேண்டுகிறோம். உமது நண்பன் க. நவரட்ணராசா உமக்காக இறைவனை மன்றாடுகிறார் மற்றைய மன்னார் நண்பர்களும் மாமா அப்புளா கொழும்பு, செல்வக்குமார் அவர்களின் குடும்பத்தினர் மோட்சத்தில் இருக்க பிரார்த்திக்கின்றனர் நீர் அந்தோனியாருடன் மோட்சத்தில் இருக்க அனைவரும் பிரார்த்திக்கிறோம்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும் தகவல்: S. சிவபாக்கியம். (6204

# ஓவியர் அமரசேகரா 100-வது பிறந்த தினம்

(வெள்ளவத்தை)

ஓவிய மேதை கேட்முதலியார் ஏ. ஸி. ஜி. எஸ். அமரசேகராவின் 100வது பிறந்த தினம்மார்ச் 3-ம் திகதி அவரது ஓவியக் கூடத்தில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

ஓவியர் அமரசேகராவின் 100 வது பிறந்த தினத்தை சிறப்பாக கொண்டாட கொழும்பு கலைச்சங்கச் செயலாளர் கே. பாலச்சந்திரன் நூற்றாண்டு பிறந்ததின விழாக் குழுவின் மூலம் ஏற்பாடு செய்துவருகின்றார். ஓவியரான அமரசேகரா இலங்கையின் தலைசிறந்த ஓவியராவார். இவரின் ஓவியங்கள் உலகின் பல நாடுகளிலுமுள்ள ஓவியக் கூடங்களில் இடம் பெற்றுள்ளன, இவர்வரைந்த மகாத்மா காந்தியின் ஓவியம் பிரிட்டிஸ் நூதனசாலையில் இடம் பெற்றுள்ளது.

ஓவியர் அமரசேகராவின் வாழ்க்கைக் குறிப்புகளை கொண்ட சிறப்புமலர் பிறந்ததின வைபவத்தின் போது வெளியிடப்படவிருக்கிறது. இம் மலரில் கௌரவ அமைச்சர்கள் திரு றொனிடிமெல், திரு காமினிதிஸநாயக்கா, திரு. ஈ. எல். பி ஹுருள்ள, திரு. ரணில்விக்கிரமசிங்க, திரு நிஸங்காவிஜயரத்ன, திரு ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ், சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கிர் மாக்கார், எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் உட்பட பல முக்கியமானவர்களின் ஆசிச்செய்திகள் இம்மலரில் இடம் பெற்றுள்ளன. மலரின் சிறப்புப் பிரதிகளை ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் ஆகியோரிடம் கொழும்பு கலைச்சங்க தூதுக்குழு நேரில் சென்று கையளிக்கும்.

நூற்றாண்டு விழாக்குழுத் தலைவராக சர்வோதய இயக்கத்தலைவர் டாக்டர் ஏ. டி ஆரியரட்ண விழா ஏற்பாட்டுக் குழுத்தலைவராக கொழும்பு மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. நோபல் வேதநாயகம் விழாச் செயலாளராக கொழும்பு கலைச்சங்கச் செயலாளர் திரு. கே. பாலச்சந்திரன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## கூட்டுப்பலி பூசை

(கரவெட்டி)

பருத்தித்துறை தும்பளை புனித லூர்த்துமாதா தேவாலயவருடாந்த நவநாட் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை காலை நடைபெற்ற கூட்டுத் திருப்பலிப்பூசையுடன் நிறைவு பெற்றது.

கூட்டுப் பலிப்பூசை அருட்திரு ஜே. பி. ஈ. செல்வராசா அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

## மாதகலுக்கு மருத்துவ மாது

(பண்டத்தரிப்பு)

மாதகல் கிராமத்திற்குபுதிய மருத்துவமாது ஒருவரை விரைவில் நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்று யாழ் சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் டாக்டர் கே. மாணிக்கம் மாதகல் கிரசமோதய சபைக்கு அனுப்பிவைத்துள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

# நெல்லியடிப் பகுதியை நகர சபையாக மாற்றுக!

## கிராமோதயசபை கோரிக்கை

[கரவெட்டி]

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை நெல்லியடி உப அலுவலகப் பகுதியைநகர சபையாக மாற்றித் தரும்படி அரசாங்கத்தைக் கோருவது என்று கரவெட்டி வடக்கு கிராமோதயசபை தீர்மானித்துள்ளது.

கரவெட்டி வடக்குகிராமோதய சபையின் மாதாந்தக்கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அதன் தலைவர் திரு என். பாஸ்கரன் தலைமையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றபோதே இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானத்தை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு பிரதேச சபை ஊடாக யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபையிடம் சமர்ப்பிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் பிரஸ்தாப தீர்மானம் நிறைவேற்றப்படுவது பற்றி கிராமோதய சபைத் தலைவர் திரு பாஸ்கரன் குறிப்பிடுகையில்: கடந்த ஆண்டு இவ்வுப அலுவலகப் பகுதியில் இருந்து 7 லட்சம் ரூபா வருமானமாகக் கிடைத்துள்ள போதிலும் எந்தவிதமான வேலைகளும் இங்கே நடைபெறவில்லை, ஆதலால் நெல்லியடி உப அலுவலகப் பிரிவை நகரசபையாக மாற்றுவதன்மூலமே இப் பகுதியில் இருந்து கிடைக்கும் நிதி மூலம் இப்பகுதி வேலைகளை நிறைவேற்றமுடியும் என்று கூறினார்.

இக்கூட்டத்தில், இம்மாதம் 26ம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் கலை விழா ஒன்றை நடாத்துவது என்றும், அதற்கு யாழ். அரசாங்க அதிபரை பிரதம விருந்தினராக அழைப்பது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# சனசமூகநிலைய ஒன்றியங்களை பதிவுசெய்தல்

யாழ்ப்பாணம்)

சனசமூக நிலையங்களின் வருடாந்த நன்கொடைகளைகூட்டுமாறு அவற்றின் வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும் மற்றும் யாழ். மாவட்ட சனசமூகநிலையங்களின் ஒன்றியத்தினை அரசாங்கத்தில் பதிவுசெய்து கொள்ளுவதற்கும் ஏற்பாடுகளைச் செய்துதருமாறு சாவகச்சேரி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினத்தை சந்தித்துக்கேட்பதற்கென இம்மாதம் 12ம் திகதி சனிக்கிழமை யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் ஒன்றியத்தின் செயலாளர் திரு. கி. கி. வரதராசா தலைமையில் ஐந்துபேர் கொண்ட குழுவொன்று செல்லவிருக்கின்றது.

## எமது மக்களின்....

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ணம் அரசினர் வைத்தியசாலை மாடிக் கட்டிடத்திற்கும். கள்ளிலிருந்து சாராயம் வடிக்கும் திக்கம்பனம் சாராயத் தொழிற்சாலைக்கும், திருநெல்வேலியில் கோழித்தீன் உற்பத்தித் தொழிற் சாலைக்கும் மற்றும் கிளிநொச்சி பிரதேசத்தின் அபிவிருத்திக்குமாக பல இலட்ச ரூபாக்களை இந்த 24 இலட்சம் ரூபாவிலிருந்து ஒதுக்கீடு செய்திருக்கிறோம்.''

''இதுபோக மிகுதிப் பணத்தில் பெரும்பகுதியை கடந்த வருடம் கட்ட ஆரம்பித்து அரை குறையான நிலையில் உள்ள பாடசாலைக் கட்டிடங்களுக்கும் கொடுக்க வேண்டியுள்ளது. இந்நிலையில் தொகுதியின் இதர வேலைகளைச் செய்வதற்கு நிதியை எங்கிருந்து நாம் பெறமுடியும்.?

''எமது இனத்திற்கு பூரண விடுதலை கிடைக்கும் வரை மக்களிற் தேவைகளை நாம் புறக்கணிக்கவும் முடியாது. நீர் வசதி இன்றி இருப்பவனுக்கு விடுதலை கிடைக்கும் வரை நீரைக்குடியாமல் இரு என்று சொல்லிவிடமுடியாது. அதனால் முக்கியமாக செய்ய வேண்டிய செய்யக்கூடிய அபிவிருத்தி வேலைகளை நாம் செய்யத்தான் வேண்டும். இதனாலேயே மாவட்ட அபிவிருத்தி சபைகளை, உருவாக்குவதற்கு நாம் ஆதரவு வழங்கினோம். இச்சபைகள் திட்டமிட்டபடி இயங்கினால் எமது பிரதேசங்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்லக்கூடிய வாய்ப்பு உண்டு. அரசு-கூட்டணி உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளின்போது இந்த சபைகளுக்கு கூடுதல் அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்று நாம் வற்புறுத்தினோம். அரசும் அதை ஏற்றுக்கொண்டு நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தது. இதை செயற்படுத்துமாறு இப்போதும் அரசை வலியுறுத்தி வருகின்றோம்.''

தமிழ் இளைஞர் பேரவை அமைப்பாளர் திரு. மாவை சேனாதிராசாவும் உரையாற்றினார்.

விரையுங்கள்
பட்ஜெட்டுக்கு முந்திய விற்பனை

ஆர்பிகோ

HURRY!
PRE BUDGET SALE

உற்பத்திப் பொருட்கள்

★ உருக்குத் தளபாடங்கள்
கதிரைகள், மேசைகள், படுக்கைகள், தொலைபேசி ஸ்ரான்டுகள்.
அலுமாரிகள், கபினெற்றுகள், ஸ்டூல் முதலியன

★ காரியாலய உபகரணங்கள்
மேசைகள், கதிரைகள், பைல் கபினெற்றுகள்

★ மெத்தை வகைகள்
ஆர்பிபோம் மெத்தைகள் (சகல அளவுகளிலும்) லற்டெக்ஸ் போம் குஷன்கள் தலையணைகள்.

★ விளையாட்டுப் பொருட்கள்
பந்துகள், கிரிக்கெட் பந்து, மட்டைகள், விளையாட்டுப் பாவனைப் பொருட்கள்

டிரான்ஸ்லங்கா மாக்கெற்றிங் லிமிட்.

(விசேட விற்பனைப் பிரிவு)


இறக்குமதி செய்யப்பட்ட மினிபஸ் டயர்கள் (விலை ரூபா 650/- மட்டுமே)
இங்கிலாந்திலிருந்து தருவிக்கப்பட்ட அழகு சாதனப் பொருட்கள் குழந்தைகள், ஆடவர், பெண்டிர் அனைவருக்கும் ஏற்றவை. (LONDON EVETEE PRODUCTS)
பவுடர், சவர்க்காரம், நகப்பொலிஷ் உதட்டுச் சாயங்கள் (விசேட கலர்களில்)
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

டிரான்ஸ்லங்கா மாக்கெற்றிங் லிமிட்டெட்,
இல 1, புதிய நவீனசந்தை (முதலாவது மாடி) யாழ்ப்பாணம்.
(போன்: 23027)

**றீகல்** [யாழ். நகர்]
அநேகரின் வேண்டு கோளுக்கிணங்க மேலும் 4 தினங்கள் மட்டும்
**எங்க வீட்டுப் பிள்ளை**

**ஹரன்** [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
சுதாகர் - ராதிகா
**கிழக்கே போகும் ரயில்** (கலர்

**வெலிங்டன்**(மானிப்பாய்)
தினசரி- 6-15, 9-15
சனி. ஞாயிறு 2-30
**முரட்டுக் காளை**

கோப்பாய் கல்வி வள நிலையத்தினூடாக வசதி குறைந்த ஆயிரம் மாணவர்களுக்கு இலவச அப்பியாசப் புத்தக விநியோக விழாவில், கோப்பாய் கல்வி வள நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ் சி எஸ். சிதம்பரநாதன் பேசுவதையும், கொப்பிகளை அன்பளிப்புச்செய்த சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசாவும், அச்சுவேலி புனித தெரேசா மகளிர் வித்தியாலய அதிபர் சங்கைக்குரிய சகோதரியும் அருகில் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.


**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 4-45, 7-00 9-30
Terence Hill—Ernest Borgnine in
**Super Snooper** (Action-Comedy-Color)

**வெலிங்டன்**
[யாழ். நகர்]
தினசரி 5 காட்சிகள்
BLOODY GOLANTINA

**லிடோ** [யாழ். நகர்]
தினசரி 4 காட்சிகள்
கமல்-ஸ்ரீதேவி
**பதினாறு வயதினிலே**

**ஸ்ரீதர்** (யாழ். நகர்) தினசரி 5 காட்சிகள்
10-30, 2-00, 4-30, 7-00, 9-30
16--18
**CUBA**

**ராணி** தினசரி 10-00, 2-00, 6-00, 9-30
(யாழ். நகர்)
ஆந்திரா முதலமைச்சர் என். டி. ராமாராவ், ஜெமினி - சாவித்திரி நடித்த
**மாயா பஜார்**
பாடசாலைப் பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்துதரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ்நகரில்இதுவே. கடைசி சந்தர்ப்பம்
இன்னும் சில தினங்கள் மட்டும்
**வின்ஸர்** தினசரி 4 காட்சிகள் (யாழ்நகர்)
✶ சிவாஜி ✶ வாணிஸ்ரீ ✶ பாலாஜி ✶ நாகேஷ்
**"வசந்தமாளிகை"**
[கலர்]
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி)

**மனோகரா** தினசரி 10-30, 2-15, 6-00, 9-45
(யாழ். நகர்)
ஆந்திர முதலமைச்சர் என். டி. ராமராவ்
கே. மாலதி, எஸ். வி. ரங்கராவ், ரேலங்கி
**பாதாள பைரவி**
(இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம்புதிய பிரதி)

குறிப்பிட்ட தினங்கள் மட்டும்
தினசரி 10-00, 2-00, 6-00,9-30
**ராஜா** (யாழ்- நகர்)
சிவாஜி - சாவித்திரி - தேவிகா
**கர்ணன்** இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புத்தம் புதிய பிரதி (ஈஸ்ட்மன் கலர்)
பாடசாலை பிள்ளைகளுக்கு விசேட ஒழுங்குகள் செய்து தரப்படும். முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.
எமது அடுத்த வெளியீடு
**துணிவே துணை**


## வல்வையில் முதியோர்களுக்கு கௌரவம்

[புலோலி]

எமது எதிர்காலச் சந்ததியினர்களுக்கு வழிகாட்டிகளாக திகழும் முதியோர்கள் கௌரவிக்கப் படவேண்டும் அப்போதுதான் எமது சமுதாயம் உயர்வடைய முடியும் முதியோர்கள் தங்கள் அறிவு ஆற்றல், அனுபவங்களை இளைஞர்களுக்கு புகட்டவேண்டும்.

இவ்வாறு வல்வை வடக்கு தெற்கு கிராமோதய சபைகளின் முதியோர் தின விழாவிலே பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு வை. வேலும்மயிலும் குறிப்பிட்டார். வல்வை சிவகுரு வித்தியாலய மண்டபத்தில் கிராமோதய சபைத்தலைவர் திரு ஆர். வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது.

இம்முதியோர் தினவிழாவிலே முதியோர்கள் சார்பில் உரையாற்றிய வல்வை நகர முதல்வர் திரு எஸ். ஞானமூர்த்தி கூறியதாவது:-

"முதியோர்கள் இறைவனுக்கு அடுத்த படியானவர்கள். வல்வைப் பகுதியில் முதியோர்கள் கௌரவிக்கப்பட்டே வருகின்றனர்.

"இப்பகுதியில் வாழும் முதியோர்கள் முற்காலத்தில் கப்பல்களை ஓட்டித் தங்களை வருத்தித்தான் எம்மை வளர்த்தார்கள். இன்றைய உலகிலே இயந்திரமயமாகக் நிகழ்ந்து வருவதனால் தெய்வபக்தி, முதியோர்களை மதித்தல் என்பன அருகிவருகின்றன. இந்நிலை தொடர்ந்தும் நீடிக்குமானால் அழிவுக்கேவழிவகுக்கப்படும்" என்றார்.

[க]

## கூட்டணிக் கிளை உறுப்பினர்

(மாவிட்டபுரம்)

அளவெட்டி தெற்கு தமிழர் விடுதலைக்கூட்டணி கிளை புனரமைப்புக் கூட்டம் அளவெட்டியில் நடைபெற்ற சமயம் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக தெரிவாகினர். தலைவர் சட்டத்தரணி மு. திருநாவுக்கரசு, உபதலைவர் திரு சுந்தரலிங்கம், செயலாளர் திரு. க. காசிராசா, உபசெயலாளர் திரு அ. நிவகேஸ்வரன், பொருளாளர் திரு. செ. சிவயோகநாதன்.

நிர்வாக உறுப்பினர்களாக திருவாளர்கள் சு. ஞானசேகரம், ப. விக்கினேஸ்வரன், பி. துரைராஜா, அ. மரியநாயகம். சு பாலச்சந்திரன், பொ. நந்தேஸ்வரன், க. செல்லையா பொ. சிவபாலன், ம. அப்புத்துரை ஆகியோர் தெரிவானார்.

[க]

# இன்றைய பலன்

மாசி மாதம் 4-ம் திகதி
புதன்கிழமை
(16—2—83)

மேடம்: திடீர் திருப்பம் வாழ்க்கையை வளப்படுத்தும் சிலர் வெளியிடத்துப் பயணம் சிறப்படையும், சிலர் வாழ்க்கை அதிர்ஷ்டகரமாக அமையும்.

இடபம்: பிரிவின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள், சிலர் வாழ்க்கையில் அவப்பெயருக்கும் இடமுண்டு மனதிடம் விரும்பத்தக்கது.

மிதுனம்: மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களின் மனதைக் கவருவீர்கள், பயன் தரும் பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம், அறிஞர் ஒருவரின் சந்திப்பு ஏற்படும்.

கடகம்: அறிவுத் தாகம் மேலோங்கி நிற்கும், ஆராய்ச்சிகளில் ஈடுபடுவீர்கள், விருந்தினர்கள் வருகை உங்களுக்கு மகிழ்ச்சியைத்தரும், எதிர்பாராத பணம் கைக்கும் கிடைக்கலாம்.

சிங்கம்: கௌரவத்தைப் பாதிக்கக் கூடிய சம்பவம் இடம்பெறும், தூற்றலைத் தொடுப்பதற்கும் எதிரிகள் காத்திருப்பார்கள், பெரியவர் ஒருவருடன் பகைத்துகொள்ள நேரிடும்.

கன்னி: பசுமையான சம்பவம் நடைபெறும், சாஸ்திர வழியால் நன்மைகள் கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும், காதல் வானில் கனிவான நிகழ்ச்சியுண்டு.

துலாம்: அன்னியர் சகவாசமும் உங்களை ஆபத்திக்மாட்டி வைக்கும், சிறிய விடயத்திற்கு கூட அதிக ஆத்திரப்படுவீர்கள், உள்வீட்டிலேயே பூசல் தோன்றும்.

விருச்சிகம்: இதயத்திற்கு இதம்தரும் செய்தியொன்று கிடைக்கலாம், புண்ணிய கருமங்களில் விருப்பம் மேலிடும், ஸ்தல யாத்திரை ஒன்று மேற்கொள்ளப்படும்.

தனு: உத்தியோகத்தில் உயர்வுடன் உரிமையும்கிடைக்கும், உற்சாகமாகக் கடமையாற்றுவீர்கள், உவகைசேரும் வித்தையில் வெற்றி காண்பீர், வேண்டியது கிடைக்கும்.

மகரம்: மெத்தவும்பொருள் சேரும், மேலிடத்து ஆதரவு தப்பாமல் கிட்டும், தித்திக்கும் செய்தியுடன் தேனான வாழ்வும் உண்டு, கவிஞர்கள் கௌரவிக்கப்படுவார்கள்.

கும்பம்: எண்ணங்கள் ஆயிரம் சிந்தனையிலே வந்து உதிக்கும், ஏமாற்றம் தாக்கும், விந்தையான போக்கு வேடிக்கைகாட்டும், அற்ப விடயத்திற்குக்கூட ஆத்திரப்படுவீர்கள்.

மீனம்: இடர்பல தாக்கும், இதயத்தில் எரிமலை குமுறும், உதவி செய்யப்போய் உபத்திரவத்தை அணைத்துகொள்ள நேரிடும். அவசர புத்தியினால் விபரீதங்கள் விளையலாம்.

சோதிடக் கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை.**

## விளையாட்டுப் போட்டிகள்

[கரவெட்டி]

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர்பிரிவிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே இவ்வாண்டு கரப்பந்தாட்டம், எல்லே, வலைப்பந்தாட்டம், மெய்வல்லுநர் போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

இதற்கான விண்ணப்பங்களை இம்மாதம் 16ம் திகதிக்கு முன்னர் கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவு விளையாட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

## கடதாசியுடன் ஆஸ்பத்திரி போகவேண்டும்!

[பண்டத்தரிப்பு]

பண்டத்தரிபபு அரசினர் கிராமிய வைத்தியசாலைக்கு சிகிச்சை பெறச் செல்லும் நோயாளிகள் டாக்டர்பரிசோதித்து மருந்து எழுதிக்கொடுப்பதற்காக கடதாசியையும் தம்முடன் எடுத்துச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதுபற்றிய அறிவித்தல் ஒன்று வைத்தியசாலை விளம்பரப் பலகையில் ஒட்டப்பட்டுள்ளது.

மருந்து எழுதிக் கொடுக்கும் பத்திரங்களுக்கு இவ் வைத்தியசாலையில் பெருந்தட்டுப்பாடு நிலவுவதனால் மருந்து எடுக்க வரும் போது இதற்கான கடதாசியையும் கொண்டு வரவேண்டும் என்றும், இதனால் பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்கு தாம் பெரிதும் வருந்துவதாகவும் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஜி. பத்மஜெயன் தெரிவித்துள்ளார்.

[க]

## கிழக்கிலங்கை வெள்ள அகதிகட்கு கத்தோலிக்க மக்கள் உதவி

[கரவெட்டி]

திருகோணமலை - மட்டுநகர் வெள்ள நிவாரண நிதிக்காக யாழ். மாவட்டத்திலுள்ள கத்தோலிக்க பங்குகளில் இருந்து 22 ஆயிரத்து 95 ரூபா 85 சதம் சேகரிக்கப்பட்டுள்ளதாக யாழ். மறை மாவட்ட மனித முன்னேற்றநிலையம் அறிவித்துள்ளது.

சேகரிக்கப்பட்ட இந்நிதியில் கரவெட்டிப் பங்கில் இருந்தே ஆகக்கூடுதலான தொகையாக 3,199 ரூபா கிடைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒருவாரமாகியும் தந்தி கிடைக்கவில்லை

[கரவெட்டி]

கரவெட்டி தபாற்கந்தோரில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட தந்தி ஒன்று ஒரு வாரகாலமாகியும் கிடைக்கவில்லையாம்.

தன்னாலை- கோவிற்சந்தைப் பகுதியைச் சேர்ந்த திரு. கே. வேலுப்பிள்ளை என்பவர் தாம் பணிபுரியும் காரியாலயத்திற்கு லீவு கோரி கடந்த 7ம் திகதி இத்தந்தியை அனுப்பிவைத்திருந்தார். பிரஸ்தாப தந்தி நேற்றுவரை கிடைக்காதது பற்றி கரவெட்டி தபாற்கந்தோர் அதிபரிடம புகார்செய்யப்பட்டுள்ளது.

## இலட்சார்ச்சனை

(சுளிபுரம்)

பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் கோவில் இலட்சார்ச்சனை இன்று ஆரம்பமாகின்றது. தொடர்ந்து பத்துத் தினங்கள் காலை மாலை அர்ச்சனை நடைபெறும். 26ம் திகதி சனிக்கிழமை காலை மாசிமக புண்ணியகாலத்தில் திருவடி நிலையில் தீர்த்தத் திருவிழா நடைபெறும். (ப)

## இடமாற்றம்

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரத்தில் இயங்கும் அரசாங்க மரக்காலை முகாமையாளராக திரு. எஸ். தந்தையா யாழ்ப்பாணத்திருலிந்து இடமாற்றம் பெற்றுவந்துள்ளார். ஏற்கனவே இங்கு முகாமையாளராக கடமையாற்றிய திரு. இ. இளைதம்பி அம்பாந்தோட்டைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார்.

[க]

# கொலை-கொள்ளை குற்றச்சாட்டின்மீது 10 மாதம் றிமாண்டிலிருந்த மூவர் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

ஒருவரைக் கொலைசெய்தது. மற்றொருவருக்குச் சொந்தமான இயந்திரப்படகு, வலை ஆகியவற்றை மோசடி செய்தது சம்பந்தமாக சுமார் 10 மாதம் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர்கள் மூவரையும் தலா ஐயாயிரம் ரூபா பிணையில் செலலும்படி உத்தரவிட்ட யாழ் நீதவான் ஏப்ரல் 7ம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

அத்துடன் இரு வாரத்திற்கு ஒரு தடவை அண்மையிலுள்ள பொலிஸ் நிலையத்தில் தங்களைத் தெரியப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றும் நிபந்தனை விதித்தார்.

வாழைச்சேனையைச் சேர்ந்த எம். வை. ரஹீம், எம். ஐ. எம். இஸ்மத், மூதூரைச் சேர்ந்த இப்ராஹிம் ஹனீபா ஆகிய மூவருமே பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

82 ஏப்ரல் 3ம் திகதி குருநகரைச் சேர்ந்த துரைசாமிப்பிள்ளை சூசைப்பிள்ளையுடன் எம் ரஹீம், இப்ராஹீம், ஹனீபா, எம். ஐ. எம். இஸ்மத் ஆகியோர் நெடுந்தீவுக் கடலில் இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்றார்களாம். இவர்கள் நால்வரும் குறிப்பிட்ட தினத்திற்குள் திரும்பாததால் இயந்திரப் படகின் உரிமையாளரான குருநகரைச் சேர்ந்த மைக்கேல் யேசுதாஸன் யாழ் பொலிஸில் புகார் செய்திருந்தார். இயந்திரப் படகு, வலை ஆகியவற்றின் பெறுமதி 1 லட்சத்து 15 ஆயிரம் ரூபா.

குருநகரைச் சேர்ந்த சூசைப்பிள்ளையின் மனைவி மரியம்மாவும் தமது கணவனைக் காணவில்லையென்றும் யாழ். பொலிஸில் முறையிட்டிருந்தார்.

சம்பவதினத்துக்கு நான்கு நாட்களின் பின்னர் முல்லைத்தீவுக் கடற்கரையில் கரை ஒதுங்கிக் கிடந்தசடலம் தனது கணவரின் சடலம் என்று திருமதி அன்னம்மா அடையாளம் காட்டி, தமது கணவரின் மரணத்தில் தமக்குச் சந்தேகம் ஏற்படுவதாக முறையிட்டிருந்தார்.

இதைத் தொடர்ந்து யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் சூசைப்பிள்ளையுடன் மீன்பிடிக்கச்சென்ற மற்றும் மூவரையும் கைதுசெய்து விசாரணையின் பின்னர் றிமாண்டில் வைத்திருந்தனர்.

மூன்று சந்தேகநபர்கள் சார்பிலும் சட்டத்தரணி ராஜன் செல்லத்தம்பு ஆஜராகி யாழ். நீதிமன்றத்தில் பிணை மனு ஒன்றைத் தாக்கல் செய்து, நீண்டநேரம் வாதாடினார்.

மூன்று சந்தேகநபர்களையும் தொடர்ந்து றிமாண்டில் வைத்திருப்பதற்கு எதுவித காரணமுமில்லை என்றும், பொலிசாரால் சந்தேகநபர்கள்மீது எதுவித அறிக்கையும் தயாரிக்கவில்லை என்றும், போதிய சாட்சியங்கள் இல்லையென்றும் சட்டத்தரணி ராஜன் செல்லத்தம்பு எடுத்துக்கூறி இவர்களை விடுதலை செய்யுமாறு கோரினார்.

நீதவான் வி. ஜெகசோதி சந்தேகநபர்களின் சார்பில் ஆஜரான சட்டத்தரணியின் கோரிக்கையை ஏற்று மூன்று சந்தேகநபர்களையும் நிபந்தனையுடன் பிணையில்செல்ல உத்தரவிட்டார். (மா)

## மரண அறிவித்தல்

### நவஜீவன் ஈராக்கில் அகால மரணமானார்

இவர், சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த திரு. திருமதி முத்துத்தம்பி அவர்களின் அருந்தவப் புதல்வனும், கருணாபதி அவர்களின் அன்புக் கணவரும், யாழ்ப்பாணம் "விஜயா இன்ஸ்" உரிமையாளரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் நாளை (17-2-83) பி. ப 4-30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து காளியம்புலம் மயானத்திற்கு ஈமைக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மு. நவராஜா

6210

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபூரணம் சின்னப்பா

நல்லூர் ஆயுர்வேத வைத்தியர் சின்னப்பாவின் அன்பு மனைவியும், முல்லைத்தீவு மாவட்ட அமைச்சரின் இணைப்புச் செயலாளர் செல்வரத்தினத்தின் அன்புத் தாயாரும், சற்குணதேவியின் அன்பு மாமியாரும், காவேரியின் பேத்தியுமாகிய அன்னபூரணம் காலமாகிவிட்டார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (16-2-83) புதன் மாலை 4 மணியளவில் செம்மணி மயானத்தில் நடைபெறும்.

31, ஆடியபாதம் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

6202

## காமன்வெல்த்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாலை 3-30 மணிக்கு பத்திரிகையாளர் மாநாடு நடைபெறுமென்றும், 4-30 க்குப் பின்னரே நடைபெறுமென்றும் பத்திரிகை நிருபர்கள் மாநாடு நடைபெறும் அறையில் சென்று இருக்குமாறும், திரு. பீரிஸ் சொன்னார். அத்துடன் அன்று காலை மாகநாட்டின் அங்குரார்ப்பண வைபவத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையின் பிரதி பத்திரிகைகளுக்கு உண்டா என்றும் கேட்டேன் அவர் இல்லையென்றும் கூறினார். அவர் கேட்டுக்கொண்டபடி பத்திரிகை மாநாடு நடைபெறும் அறைக்குச் சென்றபோது அங்கு 'டெய்லி நியூஸ்' 'தினமின' பத்திரிகைகளின் நிருபர்கள் மட்டுமே இருந்தனர். அங்கு சிறிது நேரம் இருந்தபின்னர் அவர்கள் அந்த அறையைவிட்டு வெளியேறியபோது நானும் வெளியே வந்துதேநீர் அருந்தினேன். அதன்பின் அவ்விருவருடனும் அந்த மண்டபத்தில் நின்று கதைத்துக்கொண்டிருந்தேன். அப்போது என்னிடம் வந்த ஒருவர் தான் அந்த மண்டபத்தில் பணிபுரிபவர் என்று கூறி. "நீர் எந்தப் பத்திரிகையைச் சேர்ந்தவர்? உமக்கு இங்கு வர அனுமதி தந்தது யார்?" என்று கேட்டார். அதற்கு நான், "திரு பீரிஸ் தான் எனக்கு அனுமதி தந்தார்" என்று கூறியதும். திரு. பீரிஸிடம் என்னை அழைத்துச் சென்று. எனக்கு 'பாஸ்' வழங்கிய விபரம் குறித்து விசாரணை செய்ததுடன் அதற்குரிய பதிவுகளையும் பார்வையிட்டார். என்னை அந்த அறையில் இருக்குமாறு கூறிவிட்டு இருவரும் வெளியில் சென்றனர். சுமார் பத்து நிமிடங்களில் திரும்பிவந்த பீரிஸ் "மன்னிக்கவும்! பாதுகாப்புக்காரணங்களுக்காக உமக்குத் தந்த இந்தப் பத்திரிகை பாஸ் அனுமதிப் பத்திரத்தை இரத்துச்செய்யுமாறு பாதுகாப்பு உத்தியோகத்தர் என்னிடம் கேட்டுள்ளார்" என்றார்.

அதற்கான காரணத்தை நான் கேட்டபோது அதுபற்றி தமக்கு வேறு எதுவும் தெரியாது என்று கூறினார். நான் எனக்கு ஏற்கனவே தரப்பட்ட அனுமதிப்பத்திரம் மகாநாடு தொடர்பான குறிப்புகள் பிரசுரங்கள் அடங்கிய தொடர்பு சாதன கோவையையும் தந்துவிட்டுப்போகின்றேன் என்றேன். அவற்றை வைத்திருக்கும்படியும் அனுமதிப்பத்திரத்தை மட்டும் தந்துவிட்டுப் போகுமாறும் கூறினார். அதன்படி நான் எனக்குத்தரப்பட்ட அனுமதிப்பத்திரத்தைக் கொடுத்து வெளியேறினேன்.

அன்று காலையில் நடைபெற்ற அங்குரார்ப்பணவிழாவின் மகாநாட்டு மண்டபத்தில் 'ஈழநாடு' சார்பில் பத்திரிகைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடத்திலிருந்து எனது கடமையை ஆற்றினேன் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அன்றைய காலை நிகழ்ச்சிபற்றிய செய்தியை வழமைபோல் தொலைபேசிமூலம் எனது காரியாலயத்துக்குக் கொடுத்தேன்.

குறிப்பு:

இம்மகாநாடு தொடர்ந்து வெள்ளிக்கிழமைவரை நடைபெறவிருக்கிறது. மேற்படி சம்பவம் காரணமாக மகாநாடுபற்றிய செய்திகளை வாசகர்களுக்கு வழங்க முடியாமைக்கு வருந்துகிறோம்.

ஆ.ர்.

## உபாலி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டுகோளை ஏற்று இந்திய விமானப்படை விமானங்களும், கடற்படைக் கப்பல்களும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளதாக இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. சத்வால் தெரிவித்தார்.

கொழும்பு வானொலியில் மணிக்கு ஒரு தடவை அறிவிக்கப்படும் சமிக்ஞையையும் இந்து சமுத்திரத்திலுள்ள நூறு கப்பல்களும் பெற்றுக்கொள்ளுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

சோவியத் செய்மதியையும் தேடுதல் வேட்டையில் ஈடுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

## உபாலி...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

உபாலி என்றுமே—

இந்த நாட்டுக்குச் சொந்தமான விமானமென்று குழந்தைப்பிள்ளைகூடச் சொல்லிவிடும்! அந்த விமானங்களுக்குச் சொந்தமானவர், விமானத்துடனேயே காணமல் போய்விட்டதான் கவலை தரும் செய்தியாகிவிட்டது!

## ரூபவாகினி...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

8-29 நாளைய நிகழ்ச்சிகள் பற்றி...

8-30- தொடர்நாடகம் [சிங்களம்]

9-00- தமிழ்ப் படம்.

9-30-செய்தி மஞ்சரி [ஆங்கிலம்]

9-45- தமிழ்ப் படம் தொடர்ச்சி.

தமிழ்ப்படம் முடிந்ததும் இன்றைய ஒலிபரப்புச்சேவை முடிவடையும்.

# கேள்வி அறிவித்தல்

## மெர்க்கன்டைல் கிறெடிற் லிமிட் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ள காரியாலய கட்டிடம்

(1) காரியாலய கட்டிடம், மேலிணைக்கப்பட்ட தண்ணீர் தாங்கிகளுடன் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிப்பதற்கு சீல்வைத்த கேள்விகள் கொழும்பு-1, மெர்க்கன்டைல் கிறெடிற் லிமிட், நிர்வாக சபைத் தலைவரால் அழைக்கப்படுகின்றன.

(2) கேள்விப்பத்திரங்கள் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 325/- செலுத்தி யாழ்ப்பாணம் 11/8, ஸ்ரான்லி வீதியில் உள்ள மெர்க்கன்டைல் கிறெடிற் லிமிட். கிளை முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(3) கேள்விகள் சகல ஆவணங்களுடனும் 1983 மார்ச் 7-ந் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக கிளை முகாமையாளர், மெர்க்கன்டைல் கிறெடிற் லிமிட், 11/8, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.

(4) கேள்விகள் ஏற்கும் நேரம் முடிவடைந்த உடன் கேள்விகள் யாவும் மேற்காட்டிய விலாசத்தில் வைத்து திறக்கப்படும்.

(5) மேலும் விபரங்கள் தேவைப்படின் யாழ்ப்பாணம், மெர்க்கன்டைல் கிறெடிற் லிமிட், கிளை முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

# மெர்க்கன்டைல் கிறெடிற்

## லிமிடெட்

51, ஜனாதிபதி மாவத்தை,
கொழும்பு - 1.

6195

## மரண அறிவித்தல்

### திருமதி இளையம்மா மதியாபரணம்

காலஞ்சென்ற மலாயன் பென்ஷனர் திரு. சி. மதியாபரணம் அவர்களின் அன்பு மனைவியும், கமலாதேவி (வேம்படி மகளிர் கல்லூரி), விவேகானந்தன் (கட்டிடத் திணைக்களம், கொழும்பு வடக்கு), நளாயினிதேவி (கொழும்புத்துறை ம. வி), பவானந்தன் (யாழ். மத்திய கல்லூரி), சர்வானந்தன் மிருக பரிபாலன அதிகாரி), Dr. ஸ்ரீதரன் (இங்கிலாந்து), ஸ்ரீதேவி (இரத்மலானை இந்துக் கல்லூரி), சியாமளாதேவி முன்னைநாள் அரச விமானப்படைக் காரியாலயம்), Dr. கிருஷ்ணானந்தன் (சென்னை அரச வைத்தியசாலை) ஆகியோரின் அருமைத் தாயாரும், R. C. தவராஜா (ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்), மு. கனகசபை (வட்டாரக் கல்வி அதிகாரி), நிர்மலா (வ/ஓமந்தை ம. வி). பூமா, Dr. மஹாரேஜினி (இங்கிலாந்து). சொக்கலிங்கம் (சட்டத்துறை மாணவன்), முகுந்தன் (முன்னைநாள் ஹொலிடே இன் ஹோட்டல், தற்பொழுது ஜெட்டா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ராகவன், ரமணன், யாமினி, சத்யா, ஷோபனா, வைஜயந்தன் ஆகியோரின் அருமைப் பாட்டியும் ஆகிய திருமதி இளையம்மா காலமாகிவிட்டார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் இன்று (16-2-83) பி. ப. 4 மணியளவில் 258, பருத்தித்துறை றோட், நல்லூர், யாழ்ப்பாணம் இல்லத்தில் நடைபெற்றுத் தகனக்கிரியைகள் செம்மணி மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

6205

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால் [illegible] 1983-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236/81 Eelanaadu - P. O. Box 49, Telegram: Eelanaadu, Telephone: 22389 — 24126